கையில்அதிகவருத்தமாகியவொருசத்தமவன்காதில்விழுந்தது அதைக்
கேட்டங்குசென்றுநோக்குகையில் சந்திரனொளிபோன்றமுகத்தினை
யுடையதிரண்டுருண்ட கும்பஸ்தனங்கள் விம்முற இனிப்புடனொரு
வாலிபப்பெண் கட்டிலின்மேல்படுத்துக்கொண்டு தேம்பித்தேம்பிய
ழுதுக்கொண்டிருக்க அரசன்மகன் கண்டு தன்சிரசிலிருந்த குல்லா
வைக்கழட்டி"கையிற்பிடித்துக்கொண்டவளருகிற்சென்றுஓஇன்பம
னையுமுயிரே இந்தவாலிபப்பிராயத்தில் உன்னையணைத்து உதட்டின்
மதுரத்தைவிட்டுத் தனியாய்நீக்கியவன்மனதில் காமத்தீயைக்கொளு
த்து கண்ணேபெண்ணே"மயிலேகுயிலே மானேதேனே யவன்மேல்
கொஞ்சமுமிரக்கமொழிந்தாய் அதுகளைவிட்டுநீங்கி இங்குதனியாயி
ருக்கவேண்டிய காரணமென்னவென்று கேட்க இம்மொழியையெல்
லாமவள்கேட்டுஇவன்சொன்னபரிகாசவார்த்தைகளா லதிகவெட்க
மாகித்தனதுப் பட்டாவையெடுத்து முகத்தைமூடிக்கொண்டு நீயார்
யென்னைத்தேடுலையாகில் ஓடிவிடு இல்லாவிடில் வெட்டுண்டுபோவா
யென்றுசொல்லினள்.

அதைதாசுல்முலுக்குகேட்டுஎன்சிரசை நீவெட்டுவையாகிலுன
க்கீவேனல்லது வேறொருவருக்குகொடுக்கமாட்டேன் என்னிடத்தி
ல்ஒவ்வொருவஸ்துக்களிருக்கின்றது உனக்குவேண்டுமானால் ஆசரா
யிருக்கின்றது நீபாதவனைக்கொண்டுஎனக்குப்பயமுறத்தினாலவனு
க்கொருபோதும் நானஞ்சமாட்டேன் ஆகையாலென்னுடையசங்கதி
களைஎல்லாம் சொல்லென்று விருப்புற்றுக்கேட்க அப்போதவன்றன்
றலையையெடுத்து நான்பரியின்மகள் என்பேர்றாஹேஅபாசா என்த
கப்பன்பேர் மூஷ்வர்ஷா அதிகஅரசாட்சிசெய்யப்பட்டவன் அப்படி
யிருக்க ஒருநாள்என்சிறியதகப்பன் பகாவலி நோய் கொண்டாளெ
ன்கிறசேதிகேட்டு தானதைவிசாரிக்கவேணுமென்று அவளிருக்கும்
தோட்டத்துட்சென்றுவினவினபின்பு அவ்விடத்தைவிட்டு என்னி
டம்வரத்திரும்பிவருகையில் வழியில்கியாதேவி என்னைவலுவினாற்பி
டித்துஇங்குகொண்டுவந்து என்னுடன்சேர்வதற்காக நானவனுக்கி
டங்கொடுக்கவில்லை அதனாலவனென்னைநாள்தோறும் விதவிதமாகிய
வருத்தங்கள்வந்துநேரிடும்படி செவந்தவீரபுணர்ச்சிக்காகவும்நித்த
மும்வந்துதொந்தரவுசெய்துஎன்காற்கும்விலங்குபூட்டிநித்தமென்ற
லைமேலெத்தனையோமடிலைவகளும் வந்திறங்கிக் காண்டிருக்கிறதெ
ன்றுசொல்ல அதைதாசுல்முலுக்குகேட்டுஉன்சிறியதகப்பன்மகளா
கியபகாவலிக்குஎன்வியாதிமேலிட்டிருக்கிறதென்றுகேட்க அதற்கவ
ள்ஒருமனிதன்பேரி லிச்சைகொண்டு சிலநாள்வரைக்கு மிருவருங்
கூடிக்கலந்து சுகித்திருக்குந் தருணத்தில் வெவ்வேறாய்ப் பிரியுங்

காலம்நேரிட்டது இப்போதந்த காமத் தீயினால் விலைமதனும்போல்
வெறிகொண்டிருக்கிறாள் தன்னுயிரை அநியாயமாய் மாய்த்து விட
விருக்கின்றாள் அவள் துக்கத்தையுமிவ்வளவென்றுசொல்ல முடியா
து அதைநீக்கவு மவளால்முடியவில்லை அவள்புலம்புவதும் பதைப்
பதையும் துடிப்பதையும் என்சிறியதகப்பன் கண்டு அவளைச்சிறையி
லடைத்துவிட்டான் அதனால்தன்னுடையமனதில் அவ்விருத்தத்தை
யெல்லாமடக்கி அவன்கியாபக மறக்காமலிருக்கின்றாளென்று சொ
ல்ல அவைகளை எல்லாந்தாசுல்முலுக்குகேட்டு முகமும்வாடி உருவ
மும் வேறுநிறமாய்விட்டது முத்துபோலக் கண்ணீரும் வெளிப்பட்
டது அவன்நினைவும் வேறாய்விட்டது யிவைகளையெல்லாம் ராஹே
அபசாபார்த்து தீயால்மலர்வாடியதுபோல ஏனுன்முகம்வாடினதெ
ன்றுகேட்க அதற்குதாசுல்முலுக்குநானனந்தலாச்சாரில்சிக்கினன்சிறி
யதகப்பனுடைய குமாரத்தியினால்பாக்குவெட்டியி லகப்பட்டார்
போல் பதைபதைத்து நானிங்கு வருத்தமடையவும் அவளங்குஎன்
பேரில்வைத்த ஆசையினால் விலங்கோடுசிறைச்சாலையில் மனவருத்த
மோடும்தன்வரலாற்றையெல்லா மவளுக்குச்சொல்ல அதைராஹே
அபசாகேட்டு அதிகயிரக்கமாய் உங்களிரண்டுபேரினிஷ்டத்தின்மே
ல் ஆயிரமாயிரமங்களமென்றுவாழ்த்திப்பின்புகானிந்தத்தேவுடை
ய சிறையைவிட்டு மீள்வேணகில் உன்னுடையமனதின்கரம்புண்ணி
ற்குத் தேர்தலென்னுமருந்தா லாற்றிவிடுவேனென்றுசொல்ல அதை
யரசன் கேட்டு இப்போதுன்னைத் திருப்பயாராலு முடியாது இச்சி
றைச்சாலையைவிட்டு இப்போவெளிப்பட்டு எப்புறஞ்செல்ல நாடுவா
யோ அப்புறமாக அப்பகைவனுடைய யந்த்ரத்தைமனதில் வைக்கவே
ண்டாம் அப்படியிருந்தால் நீக்கிவிடு அவனைபோர் மல்லவி லெவ்வித
ஞ்செய்கிறேன் இன்னமவனுடைய மலைபோன்றஉருக்களையெல்லாம்
பஞ்சிபஞ்சாய்பறக்கவிடுகிறேன் ஆனாலென்னிடத்தில்ஓராயுதமில்லை
யென்றோத அதைராஹேஅபசாக்கேட்டு அந்ததேவினுடைய ஆயுத
வீட்டைக்காட்டிட தாசுலுல் முலுக்குசந்தோஷமாகஅதனுட்சென்
று அதிக சுலைபொருந்திய வல்லாயுத மென்றெடுத்துகையிற்பிடித்
துக்கொண்டு பின்பவளிடமாய்வந்து தன்கையிலிருந்தவிலங்கின்மே
ல் வைத்தவுடனேவிலங்கு துண்டுதுண்டாய்நொருங்கிகீழேவிழுந்து
விட்டது பின்பிரண்டுபேருமாக பிரதசிமவனுடையபாதத்தைநோக்
கிச்சிலதூரஞ்செல்லுகையில் பின்னாலிருந்தாப்போலிருந்துகோடை
இடி இடிப்பதுபோலஆங்காரத்தோடு சத்தமிட்டுக் கொண்டு யந்தத்
தேவுவருவதை றாகேஅப்சன்கண்டுநடுநடுங்கிநாவரண்டு அரசன்மக
னோடு நம்பகைவன் வருகிறானதிக எச்சரிக்கையாயிருவென்றுசொல்

லத் தாசுல்முலுக்கு தன் அக்கினிமறைத்துவைத்திருந்தகுல்லாவை
க்கழற்றி அவள்தலையிலிட்டுவிட்டு கானந்ததேவுனுடையபுரமாகத்
திரும்பி அதன்முன்பின் வந்துநின்று இடிசத்தம்போல ஓ கொடிய
தேவே நீஎச்சரிக்கையாயிருஉன்பாதத்தைமுன் தூக்கிவைக்கவேண்
டாம் என்சொல்லைக்கேளாமல்மீறினால் ஓரடிபடிப்பேனெனில் நீவச
மாய்விடும்படி என்றுசொல்லஅதைத்தேவுகேட்டுஇடிபோலச்சத்த
மிட்டுபெருத்தவாயைத்திறந்துவாசிபோன்றபற்களெல்லாந்தெரியத்
தக்கதாக வெளியேகாட்டி ஆ ஆ இதென்னபுதுமையின்பேச்சாயிருக்
கிறதென்று அக்கினிமேல்விரலைவைத்துபெருமலைக்கொப்பானயானை
யுடன் சிற்றெறும்பெதிர்ப்பதுபோலும் பேரண்ட பக்ஷியுடன் ஊர்க்
குருவி யெதிர்ப்பதுபோலும் இம்மனிதனம்மோடெதிர்ப்ப தென்பது
எனக்குவெட்கமாயிருக்கின்றதேதுபின்மேலெப்படியென்கையையெ
றிவேன்என் வலியகரத்தால் உரமாக உன்னை யோரடியடிப்பேனாகில்
கோக்காபுமலையின்முக்கமுந்திரும்பிவிடுமே ஒருபிடிமண்ணால் படை
யுண்டமனிதனை எப்படிபடிப்பேனென்று பலவாறாகச்சொல்லிஆனா
லும்நல்லதுஎன்வஸ்துவை யெனக்களித்து விட்டு நீவந்தபாதையை
நோக்கிப்போ அதேனென்றாலென் னுயிரை விளக்கின்மேல்வீழ்த்து
அந்தப்பூச்சியுயிரை மாய்த்துக்கொள்வது போலாயினேனின்னமவ
ள்மேல்கொண்டிட்டஆசையினால் அடிக்கடிதீமூண்டுக் கொண்டேயி
ருக்கின்றதுவிட்டுவிடென அதைத்தாசுல்முலுக்குகேட்டுஓகொடுமை
பூண்டப வந்தானே அறிவில்லாதவனே கொஞ்சமு மனஞ்சலியாமல்
றாஹஅபசாஉன்னுடைய காமங்கூடென்றுமே ஆனால் நான் நாயனு
க்கு மிகவும் பயப்படுகிறே னல்லவா இல்லாவிட்டால் நீயிப்போது
சொல்லிய நாக்கை நான்வெறிப்பார்த்து துண்டித்துவிடுவேனென்று
சொல்ல அதைத்தேவுகேட்டுநலத்திற்குபுறமாக இவனிப்படியோதி
னானேயென்று இரண்டுகண்ணுஞ்சிவப்புற உதடுகள் துடிக்கமனதி
னுள்கோபத்தீமூண்டு நூறுமணங்கின் கல்லொன்றெடுத்தவன்மேலெ
றிந்தானப்போது தாசுமுலுக்கு கனியின் மகத்துவத்தாலெகிறி காற்
றைபோல்மேலே பறந்துபோய் தன்கையிலிருக்குந்தடியால் தேவு
டைய பிடரிமேலோரடியடித்த ன் அவ்வடியினால் தேவுடையஉட
ம்பெல்லாம் நடுக்கமெடுத்துக்கொண்டது பின்புஅக்கோபத்தோடே
தேவைப்பார்த்து ஓ மூதேவியே நீவிலகிவிடு இப்போதுன்னை இம்மு
றை பொறுத்துக் கொண்டேன் இன்னமோரடி யடிப்பே னாகில்
இரண்டு பிளவாகி போவா யென்று சொல்லவே அதைத் தேவு
கேட்டு அதிகக் கோபங் கொண்டு மிகுந்த வல்லமையோடு பெரு
த்தசண்டை ஆரம்பிக்க அத்தேவு கூட்டம் தேவுக ளொன்று

ய்பூவும்நீரும் கானல்மழை இவைகளையெல்லாம் நன்றாயறிந்து சேர்ந்து நாலுமுகமும்வளைந்து பூவைகண்டுமொய்ப்பதுபோல மொய்த்துக்கொண்டதுகள்.

விருத்தம்-இ-ம்-புன்னாகவராளி.

அப்பொழுதரசன்மைந்தன் ஆக்கிரமாயெழுந்துசீறி
இப்பொழுதன்னோடேற்ற இருங்கணக்கூட்டமெல்லாம்
செப்பிடப்பெயரில்லாமற் சிரசுகளுருளச்செய்வேன்
ஒப்புடனோடிப்போங்கள் உயிரோடுபிழைப்பீரென்றான்

தரு-இ-ம்-புன்னாகவராளி

தனாதன தனாதனன தனாதன தனனா

சண்கள்நெருப்புப்பறக்க	மன்னன்மகன்
கண்டங்கண்டமாகவுடல்	துண்டமாய்விழ
மண்டுகிடுகிடென்ன	விரித்த
வானமுமசைவுறத்	தானீங்கிட
குறுதிநீர்போலோடிய	கொற்றவனும்
கூறுகூறாய்வீழ்ந்திடத்	தாறுமாறாக
பொருந்தினான்தேவுகளுடன்	அதுகள்
பொடிப்பொடியாகிட	அடியுடனே
அடித்தான்வீரமன்னன்	தடியால்
ஆயிரந்தேவையு	மூபாயமுடன்
நொடித்தார்நொடிக்குள்ளாய்	வெற்றிபெற்றா
நின்றானரசன்மகன்	குன்றுமலேதனா

வசனம்.

இவ்விதமாகஅரசன்குமாரன் ஆட்டின் கூட்டத்துள் புலிபாய்வதுபோல அந்தமைதானத்தில்தேவகணங்களுடன் வல்லமையைக் காட்டியது அதுகளுடன் போர்த்தொழில்செய்து மலையைச் சிற்றுளிபிளப்பதுபோல கண்டமிரண்டாகத்துண்டுதுண்டாக மண்டைகள்செண்டுபோல் பறக்க மலைகள் சாய்வதுபோல கீழ்சாய இரத்தமாக ஓடத்தலைகளுருள உடல்புரள சண்டமாருதம்போலும்கரத்தில்வாளிலங்கமுகந்துலங்க வெட்டிவெட்டிப் பிணக்காடாக்கி எல்லாரையுமோடவைத்துவருகையில் தாசல்முலுக்கு மூர்ச்சையாய்ப்பூமியின்மேல்விழ அதைறாஹேஅபசாகண்டு ஓடோடியும்வந்து அவன் தலையைத்தூக்கித் தன்றுடையின்மேல்வைத்துக்கொண்டு மார்போ

டணைத்து தன்வஸ்திரத்தால்வீசி அவர் மூர்ச்சைதெளியும்படிசெய்துதன் தலையிலிருந்த குல்லாவைக்கழட்டி யவனெதிரில்வைத்து உன் வல்லமையின்பேரில் ஆயிரமாயிரம்கொறுபான் நானுகிரம்கொறுபானிநானுகிவிடுவேனென்று சொல்லி திருஷ்டிகழித்து பின் இருவருமாகவெழுந்து பிரதௌசின் பாதையைநோக்கி நடந்து இருவரும்பட்டணத்தினருகிற் சேர்ந்தார்கள்.

அப்போது றாஹேஅப்சா தாசுல்முலுக்கை றாஹேதுபசாவென்றவனுடைய பெயருள்ளதோட்டத்துள் ளிருத்திவைத்துவிட்டுத்தனியாகத்தன் தாய்தகப்பனைக்காணப்போனான் அப்போதவர்களின்வரவைக்கண்டு மாண்டஉயிர் வந்ததுபோலக் கட்டியணைத்துக்கண்ணை முத்தமிட்டுச் சிரசைமோந்து எல்லாசங்கதிகளையுங்கேட்டிடஆதியோடந்தமாகச் சொல்லிவந்தனன் ஆனால் இவன்பகாவலியினுடைய ஆசைக்காரனென்றுசொல்லவில்லை இவையெல்லாமுச்பாஷாகேட்டுஅதிகசந்தோஷத்தோடவ்விடம்விட்டெழுந்து சோலையினுட்சென்று தாசுல்முலுக்கைகண்டுமிகுந்தஅன்பாசாரஞ்செய்துஅவன் செய்தநன்றியைப்புகழ்ந்து அவரிருக்க ஓரிடத்தைசிங்காரித்துநல்ல விரிப்புகள்விரித்து அவ்விடத்தி லவனைவைத்துப் பணிவிடைவேலை செய்ய சிலபரிகளையுங் கொடுத்துவிட்டு அவ்விடத்தைவிட்டுத் தன் சிம்மாதனத்திற்குவந்துவிட்டான்.

பதினேழாவதுகதை.

முச்பாஷாபீரோஷாவிற்கு

மகள்வந்தசங்கதியைக்குறித்துக்கடிதமெழுதினதும்

அவளைக்காணத்தாயுடன்கூடபகாவலியும்சகலரும்வந்தவிபரம்.

வசனம்.

முச்பாஷாபீரோஷாவிற்குத் தன்குமாரத்தியாகிய றாஹேஅப்சாவந்தசங்கதியைக்குறித்துக் கடிதமொன்றெழுதித் தூதன்கையிற் கொடுத்துஅதைவாசித்துப்பார்க்கையில் அதனுடையவிபரமெல்லாம்நன்றாய்த்தெரியலாயிற்றுஉடனே அரசன் தன்மனைவியாகியசத்தூனைக்கூப்பிட்டு இச்செய்தியைதெரிவித்து நீபோய்உன்கண்ணால்பார்த்துவாவென்றுவிடையீந்தனனிதைப்பகாவலியறிந்து என்தாயேநானுமுன்கூடஎன்னுடற்பிறந்தாளாகியவளைக் காணவருகிறேனென்று சொல்ல அதைக் காதூன்கேட்டு இதனை லவனுள்ளிருக்கிற காம

நோயெல்லாம் மாறிவிடுமென்றெண்ணி இன்னம் இவளும்இருக்குமிடத்தைவிட்டு வேற்றிடத்திற்குப் போவதினால் அங்குள்ளவைகளைப் பார்ப்பதினால் துக்கந்துயரமுமாறிவிடும் ஆகையால் கூடஅழைத்துக்கொண்டுபோகநாடி காலிவிட்டிருந்த விலங்கைக்கழட்டி எறிந்துவிட்டு தன்கூடஅழைத்துக்கொண்டு முச்பாஷாவினுடைய பிறகே சென்றும் பட்டணத்திற்குச்செல்லும் பாதையைநோக்கி இருவருமாகவருகிறசங்கதியை அரசன்கேட்டுத் தன்மனைவியோடு மகளையுஞ்சேர்த்து நீங்களிருவருமெதிர்சென்றழைத்துவாருங்களென்று கட்டளையிட அதைஅவர்கள்கேட்டு அதிகசந்தோஷத்தோடெதிர்கொண்டுஇருவருமாகக்கலந்து கட்டியணைத்துப்பிரியஞ்செய்து அக்காள்தங்கச்சியுஞ் சந்தோஷமடைந்து பின்னர் றாகேஅப்சா சிறியதாயாருடைய பாதத்தில்வீழ்ந்துமுத்தியிட அவளைவாரியெடுத்துமார்போடணைத்து கண்ணைமுத்தியிட்டு பின்புபகாவலியைக்கண்டுசந்தோஷித்தாள் தங்களில்அக்காள்தங்கச்சி யிருவருமாக அனேகவிதமான சேதிகளையெல்லாம் பேசிக்கொண்டிருக்கையில் அத்தருணத்தில் றாகேஅப்சாபுன்சிரிப்போடு பகாவலியின்காதோடு வாயைவைத்து நீவியாதிகொண்டிருக்கிறாயே அவ்வியாதியைத்தீர்க்கும் வயித்தியன்வந்திருக்கிறான் மெத்தவும்க்ஷேமமாயினது இப்போதுநீ ஆசையுடன் அம்மருந்தைக்குடிப்பாயாகில் உன்வியாதிநீங்கிசுகமடைவாயென்றுசொல்ல அதைபகாவலிகேட்டுத் தன்றூபருகியிருக்கிற பயத்தைக்கொண்டு அவ்வேளையில் யாதொன்றும்பேசாமல் கேட்க வல்லமையற்றவளாய் சந்தோஷமும்துக்கமும் சும்மாயிருந்துவிட்டாள் பின்பெல்லாருமாகவீடுவந்துசேர்ந்தார்கள் உடனேமுச்பாஷாகாதூன் பகாவலியுடன்சந்தித்து அதிககிருபையதனோடு அனேகவிதமாகிய சேதிகளைப்பேசிக்கொண்டு வருகையிலிடையில் றாகேஅப்சாபோனதும் மீண்டுவந்ததும் ஆதியோடந்தமாகச்சொல்லஅதனால்சொல்லுதற்கரியமிகுந்தசந்தோஷப்பட்டு அன்றிராப்பொழுதுமுழுதும் அங்கிருந்துபொழுதுவிடிந்தவுடனே தன்னகரம்போகக் காதூன் பிரயாணப்பட்டாள் அப்போது றாகேஅப்சாவந்து சிறியதாயாரினடிபணிந்து மிகுந்ததாட்சிணையுடனே அம்மாநான்சிலநாள்வரைக்கும்என்னிடத்தில்பகாவலியை வைத்துக்கொண்டு இங்கிருப்பதினாலவளுடைய மனதினுள்ளிருக்கும் கலக்கமெல்லாந்துலக்கி மனதைக் கண்ணாடியைப்போலச்செய்து அனுப்பிவைக்க நாடுகிறேனென்ற சொல்லானதைக் காதூன்கேட்டு நல்லதென்று ஒருவர்மட்டுமிங்கிருக்கவிடைதந்தேனெ

ன்றோகி பகாவலியைவிட்டுவிட்டுத் தானமாத்திரம்புறப்பட்டு பாசே ஹிரயபோய்ச்சேர்ந்தான்.

பின்பு றாகேஅபசா பகாவலியைத் தனியாயோரிடத்திற் கழைக் துப்போயுட்காரவைத்து ஆசையதிகரிக்கத்தக்க வசனங்களைப்பேச த்தொடங்கி கடைசியில் தாசுல்முலூக்கினுடைய ஆசையினக்கினிக் கொழுந்து பற்றும்படியெடுத்துச் சுட்டுக்காட்ட அதை எதிர்மொழி யால்பகாவலிகேட்டு வெட்கத்தின்விராதத்தைக்கொண்டு அதிககூசுத லையினால் சரீரமெல்லாம் ஜலம்ஜலமாகவேர்த்துப் பின்புபோகத்தினா ல்கண்கள்சிவப்புற முகத்தைக்காட்டி ஆஆதமக்கையாளே இச்சிரிப் பானவார்த்தைஎனக்குநன்றாயிருக்கவில்லை இப்படிப்பட்டகுத்துதலை யானபேச்சு உனக்குச்சரியாகவில்லை இதுஉன்னுடையநடத்தை இம் மறைவாகியவிடத்தில் சொல்லிகாண்பிக்கிறாயேஎனக்கிதனால்தெரிய வருகின்றது இந்தஒப்பனை உனக்கேதகுதியாயிருக்கிறது தான்திருடி அசலானைநப்பாளென்பதுபோல் நீஎன்னைநினைக்கிறாய் அடிக்கடிநீஇ ப்படிப்பட்டபேச்சைபேசாதே நீஇப்பேச்சுகளை இனிமேல் பேசுவா யேயானால் சுலையுமானபேரில் ஆணையாக நானிப்போதேஎன்வீட்டி ற்குப்போய்விடுவேன் பின்னும்நானப்போதுமிங்குவாரேன் நல்லதுக டிதத்தினாற்செய்த கூண்டினுள்ளிருக்கும்விளக்கின்மேல் அந்தப்பூச்சி க்கென்னவேலை சிப்பியிருக்குமுகத்திற்கும் சிட்டுக்குருவிக்கும் சம்ப ந்தமென்ன மனிதன் சந்தேகமேயொழிய மற்றொன் றில்லையென்று சொல்ல அதைறாகேஅபசாகேட்டு இவள்எவ்விதத்தினும் நமதுகை யிலகப்படுகிறதில்லையென்றெண்ணிப் பின்னும் என்தமக்கையாளே நானுமக்கு இதற்காக யாதொன்றுஞ் சொல்லவில்லை நீயொருவனை மோகித்திருக்கிறாயென்றும் நாடவில்லை ஒன்றுமறியாதகன்னி அவ ளைப்பிடித்ததாம் ஆறுமாதத்துஜன்னிஎன்கிறதைப்போல அல்லாவா ரும்வேலையை உன்னால் குறிக்கலாகாது ஒருவேளை யப்படியாயிருந்த போதிலும் நீபானூசுக்குள்ளவிளக்காயிருக்கிறாய் எந்தஅந்தப்பூச்சி யாவதுதானுவந்துவிழுந்துஎரிந்துபோனாலதனாலுனக்கென்னஇன்ன ம்ஆயிரம்தாமரைமலர் குளத்தில்மூழ்கினால்சந்திரனுக்கென்னநஷ்ட ம்அப்படிப்போல்உனக்கென்னவென்று நானாவிதமொழிகளினால் அ வள்கோபத்தையடக்கிவிட்டுச் சந்தோஷப்படுத்தி நல்லதுநாமிருவரு மிச்சோலையின் அழகைப்பார்த்துச் சந்தோஷமடைவோம் எழுந்திரு வென்று இருவரும் கைகோர்த்துக்கொண்டு அன்னங்கள் நடப்பது போலச்சிரிப்புடன்சோலையைச்சுற்றி வேடிகைகைப்பார்த்து வருவார்க ளைப்போல் தாசுல்முலூக்கிருக்குமிடமாக நகமுகமும் சுற்றிப் பார் த்துவரும் தருணத்தில் பகாவலியினுடைய காதில் காம விரகத்

தாபத்தால் வருத்தப்பட்டு வியாக்கூலத்தோடும் சப்தமென்ற போ
துவந்து காதில்விழுந்தது அதைக்கேட்டவுடனே மகாமயலாகிச் ச
கிக்கமுடியாமல் கடையிலென்னுன் போதினுமாகட்டுமென்று றா
ஹேறஅப்சாவைப் பார்த்து இதுயாருடைய வருத்தமாகிப ஒலியோ
அவனைஎவ்வேட்டைக்காரன் பிடித்துச் சிறையிலடைத்தானோ அத
ற்காக அவன்ஒலித்தழுகிறுனென்றுசொல்ல அதைக்கேட்டு றாஹே
அப்சா நீ அங்குவா அவ்வேடிக்கையைக் காண்பிக்கிறேன் நல்லவித
மாக அவனுடைய வாய்ப் பிறப்பையும் விசாரிக்கலாம் வாவென்று
சொல்லி யழைத்துக் கொண்டுபோய் தாசுல் முலுக்கெதிரில் நன்று
கத்தெரியும்படி நிறுத்தினுள்.

பகாவலிநிஜரூபமாக எதிரில்வந்து நிற்பதைத் தாசுல் முலுக்கு
கண்ணுரக்கண்டு மனந்தடுமாறி அறிவெனுங் கயிற்றைக் கைநழுவவி
ட்டு தன் வெட்கத்தையும் விட்டுத் தன்னறிவும் கெட்டு பொறுக்க
முடியாமல் காமத்தீயானது கொழுந்துவிட்டுப் பறக்கவிளக்கில் அ
ந்தப்பூச்சி விழுவதுபோல யாதொன்றுந்தோற்றுமல் மாண்டவுயிர்
வந்தபாவனைபோல் ஓட்டமாடியும் வந்து அவனைக் கட்டிப் பிடித்துக்
கொள்ள அப்போது பகாவலி தன்னுணமென்னும் போர்வையை நீ
க்கிவிட்டுத் தன்னுடையகையையவன் கழுத்திலிட்டுக் கட்டியுறமா
யணைத்துப் பிடித்துக்கொண்டு தாங்கள்பிரிந்துபோயிருந்த விசனக்
கடலைத்திறந்து அழுதுபிரிந்திருந்த நாள்முதலாகப் பட்டபாடுகளி
ன் கணக்கின் கட்டை யவிழ்த்துச் சவிஸ்தாரமெல்லாம் பேசுவதை
றாஹஅப்சாபார்த்து குலுங்கிக்குலுங்காத கஹகஹா வென நகை
த்து ஓ அக்காளே இதுவரைக்கும் துல்பாவினுடைய ருசியை யறிந்
தவனல்லவே அப்படியிருக்க அன்னியஆடவனுடைய கழுத்திலுன்
கையைக்கோர்த்துக்கொண்டு கட்டிப்பிடித்து முத்துதிர்வதுபோல
கண்ணீர்விட்டுக் கதறியழவேண்டிய காரணமென்ன ஓ விஸ்தார க
ள்ளியேவிறகொடிக்கப்போக கற்றுழைமுள்ளுகொத்தோடே தைத்
தது என்பதுபோல என் சிறிய தகப்பனுடைய பேரை முழுக்கடித்
தானேயென்றுசொல்ல அதைப்பகாவலிகேட்டுஉடற்பிறந்தாளாகிய
றாஹஅப்சாவே நீ என்மனதினுடைய புண்ணியத்திற்கு முதலாய்
கொண்டுவந்துபோட்டா யதைஇகழ்ச்சியன்னும்நகத்தால்கீறியெ
டுக்காதே இன்னம்நீதெரிசனையினுடைய பாணக்கத்தைக் குடிப்பா
ட்டினுய் அதற்குபதிலாக விஷத்தைக்குடிப்பாட்டாதே என்றுஎன்
னுடைய மன்றலானதெல்லாமுனக்குக்தெரிந்துவிட்டதுநீ இப்போ
தென்னையென்னசெய்ய நாடுவாயா அப்படியேசெய் நீஉன் மனதின்

படி நடப்பிக்க இஷ்டமுள்ளவாயிருக்கிறாயென்று மிகுந்தாட்சிமை
யோடு சொல்லினள்.

பின்புபகாவலியும் தாசுல்முலுக்கும் இரதியும்மன்மதனைப்போ
லச்சிரித்துவிளையாடிக் காமக்கணைகளைப்பூட்டி நயனத்தோடு நயன
முறமுகத்தோடு முகத்தைத் தைத்து கட்டியணைத்து கொங்கையை
ப்பிசைந்து காமலீலைகள்செய்து ஜலமொழுக தீராத ஆசையெல்லா
ம் மனதினுள்ளிருந்த காமவிகாரத்தை தீர்த்துக் கொண்டு சுகியெல்
லாம்பெற்று காமதாகத்தை தணித்துப்பானசம்பருகி மகிழ்வுற்றிரு
க்கும்போதில்பகாவலிதன்தேசத்திற்குபோகுநாள்சமீபித்ததுஅப்போ
து தாசுல்முலுக்கு பொறுக்க முடியாமல் ஜலத்தின் மச்சத்தை வெ
ப்பமாகிய பூமிமேலிடில் எப்படிதுடிதுடித்துப் பதைக்குமோ அப்ப
டிபோலாயினன் அதனைப் பகாவலிகண்டு தானும் தன் வெட்கத்தை
விட்டு தாசுல்முலுக்கைப்போலாகிட நாட்டங்கொண்டதை ரூஹே அ
ப்சாகண்டுஓதமக்கையேநீஇவ்வேலைசெய்யவேண்டாம் நீவிணாக உல
கத்தின்படி தூரன் பேரெடுத்துக்கொள்ளுவாய் இன்னம்கொஞ்சநா
ள்வரைக்கும் நீபொறுத்திரு அல்லாநாடுவானாகில் சிலநாளையிலுங்க
ளிருவரையுங் கூட்டுறவுசெய்வான்நானும் நீராடப்பட்டவனைக்கொ
ண்டுவந்து சேர்க்கிறேன இருவரும்இரவும்பகலுமாசையின் பானக
த்தைக்குடிக்கும்படிசெய்கிறேன் உங்களைப்பிரதலினால்கொஞ்ச மிரு
க்கின்றதுசேர்தலினால்நெருங்கியிருக்கின்றது என்மொழியைக் கொ
ஞ்சம்வைத்திரு தாய்தகப்பனுத்திரவின்பேரில்நட அல்லாகுத்த ஆ
லாஉன்னிட்டத்தை நிறைவேற்றுவானென்று பலபல விதமான புத்தி
மதிசொல்ல அவைகளையெல்லாம்கேட்டுஅதிகவருத்தத்துடனே சூ
லிஸ்தானே ஹிநடிதற்குத்தன் தாய்தகப்பனிடமாகச் சஞ்சலத் து
டனே போய்ச்சேர்ந்தாள்.

பதினெட்டாவதுகதை,

ரூஹஅப்சாதன்தாயாருக்கு

தாசுல்முலுக்குபகாவலியினுடைய

சங்கதியைச்சொன்னதும் அதைஜமீலாகேட்டு

காதூனிடத்திற்போயிருவரையும்சேர்க்கபோதித்தவிபரம்.

வசனம்.

பகாவலிரூஹே அபசாவினிடத்தில் விடைபெற்றுக் கொண்டு
தந்நாண்மனைபோய்ச்சேர்ந்த பின்பு தன்தாயாருக்கு ரூஹே அபசா

பநாவலி தாசுல்முலுக்கின்பேரில் ஆசைகொண்டு இருவரும் ஒரும
னதாய் வெரியர்போலிருக்கிற விதங்களெல்லாம் ஆதியோடந்தமா
கத் தெரிவித்தனன் அவைகளையெல்லாங்கேட்டு சிலநேரம்வரைக்கு
ம் தலைமேல்கையைவைத்து குனிந்திருந்து விசனங்கொண்டு ஆலோ
சித்துப் பின்றலையைபெடுத்து மனிதனுக்கு பரிபினுடைய ஒத்தத
லாகிறது வெகுகடினமாயிருக்கின்றது ஆனாலுமவனுன்னதேவுடை
ய சிறைபைவிட்டு மீட்டிருக்கிறான் ஆனதினாலெனக்குசுகமானதாயி
ருக்கிறது நானுமவனின் துக்கக்கடலைவிட்டு கறையேறும்படி மீள்க
வேண்டும் இன்னமவன் நாடியநாட்டத்தையும் நிறைவேற்றியவன்
கோரியவிடத்தே சேர்க்கவேண்டுமென அப்போதுடனே தன்னகரை
விட்டு நீங்கிபோகயோசித்து தட்சணம்நல்ல அழகானசித்திரமெழு
தப்பட்டவனொரு வல்லவனையழைத்து அரசகுமாரன்வடிவைப்போ
ல் எழுதவைத்து அதைகையிலெடுத்துக்கொண்டு சிரகெனுஞ்சோ
லையிலிருக்கும் காதூனிடத்திற்குபோய் சேர்ந்ததுகண்டு இருவரு
முடலுயிர்போல அதிகசந்தோஷத்தோடு கூடிக்கலந்து பேசிசிலநா
ள்கழித்துவருகையில் ஒருநாள்காதூனுஞ்ஜமீலாவுமாக அங்கிங்கின்
மொழிகளைச் சந்தோஷத்தோடு பேசிக்கொண்டிருக்கையில் பேச்சி
ன்கூடவேதானினைத்துவந்த கருத்தின்பேச்சையொருபாவனையாகப்
பேசத்தொடுத்தனள் ஓ என்தமக்கையாளே ஒருசோலையில் மதுரம்
பொருந்திய செவ்வர்னமான கந்தமலர்த் தருவினொர்கிளையிலிருக்க
அம்மலரின்மேல் பஞ்சவர்னக்கிளிவந்து உட்காராவிடில் அம்மலரி
ருந்தென்ன இல்லாவிடில்பலனென்ன இரண்டுமொன்றேயல்லது
ஒருவனிடத்தில் மாணிக்கமிருக்கின்றது அதைகோர்த்தணியாமல்
பேழையில்விட்டிருக்கிறது இருந்தென்ன இல்லாவிடிலென்ன அப்பா
வனைபோல நீ இதுவரைக்கும் வாலிபப்பெண்ணாகிய பகாவலியைய
னொருவருக்குங்கொடாமல் வைத்திருக்கிறாய் பாக்காயிருந்தால் கை
யிலும் மாமானால் தோப்பிலுமல்லவாயிருக்கவேண்டும் ஆதலாலவ
ளையவளுக்கேற்ற நிலவின்வடிவால் சுரூபனுக்கீந்து இருவரையும் உ
ட்காரவைத்து செந்தாமரைமொக்கு மலர்வதுபோல இருவர்முகமு
மலரச் சரசவிளையாட்டிலிரவும்பகலு மூழ்கியிருக்கும்படிசெய்யாம
லப்படியவள்தனியாக இதக்கமாயிருக்கும்படி வைத்திருப்பதெனக்
கெவ்வளவும் பொருத்தமில்லை என்றுசொல்ல அதைக்காதூன்கேட்
டு ஓஜமீலாவே அவள்ஒருமனிதன்பேரி லிச்சைகொண்டவளா யிரு
க்கிற சேதியையுங்கேட்டிருப்பாய் அவள்தலைமேலே பளுவாகவேயி
ருக்கின்றது அவள்நமது குலத்திலுள்ள? ஆனை இச்சிக்கிறவளாக அ
வள்வேறு குலத்தான்மே லிச்சைகொண்டு இரவும்பகலு மதேவிசன

த்தில் மூழ்கியிருக்கிறாள் அதனால்நான் அந்தவிசனமடைந்துகைசே
தமாய் பெரியோர்களிஷ்டத்தையு மெப்படிவிடுகிறது நமதுதலைமு
றைவழியையு மெப்படிக்கெடுக்கிறது யாதொருசேர்தலுந் தங்கள்
தங்கள் குலத்திற்குள்ளாகவே யாகிறது ஒருகுலபெண் வேறொருகு
லத்திற் சேருகிறதில்லையே அப்படியாரிதுவரையில் சேர்ந்திருக்கிறா
ர்கள் பரியின்குலத்திற்கு மனிதன் குலத்திற்கு மென்னமுறமை அப்
படிநான் சேர்த்துக்கொடுத்தேனென இப்படிநானாவிதமொழிகளைச்
சொல்லிக்காட்ட அதைஜமீலாகேட்டு நீஇதுவரைக்குஞ் சொல்லிய
தெல்லாம்நிஜமே அவர்களுக்கும் நமக்கும் வேறாகவேயிருக்கின்றது
ஆனால் நீமானிடத்திலே சாகவொண்ணாதே யவர்களினண்டைக்
கைகைபக்கொண்டு உனக்குதெரிந்திருக்குமாகி லிப்படிப்பட்ட நாட்ட
த்தை ஒருபோதும் உன்னுவிலெடுத்துக்கொண்டு வரமாட்டாய் ஓஅ
றிவில்லாத மனிதரின்குலமும் அவர்களின்வேலையும் நல்லநடப்பும்
உதவி ஒத்தாசையும் அடக்கத்தனமும் பொருமையும் கிருபையும்
அன்பும் ஆசாரமும் ஒரு குலத்திலு மொருவரிடத்திலுமில்லை அவர்
களின் பெருமைதனத்திற்கு கட்டுதிட்டமில்லை அவர்கள் கலத்தின்
கட்டளையுண்ணப்பட்டவர்கள் ஒருதுளியிலுண்டானவர்கள் அவர்
களின்பெருமையை நாயகனே சொல்லியிருக்கிறா னிப்படிப்பட்ட ந
டத்தையையுடைய மனிதர்குலமான நமக்கும் நூறுமடங்கு அதிக
உயர்ந்துள்ளதென்று நானாவிதசொற்களினாலவளின் மனதினுள்ளிரு
ந்தமனிதர் குமல்வைத்திருந்த பகையி நெருப்பையவித்தனள் அ
தைஜமீலாகேட்டு ஓதமக்கையாளே அப்பொல்லாத கெடுதலையுள்ள
வன் பேச்சை என்னுடன் பேசாதே இன்னமவனுக்கென் மகளைக்
கொடுத்து அவனை மருமகனாகவுஞ் செய்யபோகிறானென அப்பே
ச்சுடனே ஆறுவென்பவள் தான்கொண்டு வந்திருந்த தாசுல்முலுக்
கின் வடிவின் சித்திரத்தைக்கீமித்து ஜமீலாகாதூன்காத்திலீந்துஉன்
தமக்கை அக்து சித்திரமானது ஷறகிஸாகானெனும் பட்டணத்தை
யாளுகிற தாசுல்முலுக்கினுடைய வடிவின்தாம் ஆகையால் இதனை
யுற்று நோக்கு இதுவரையில் இவனுக்கொப்பாக ஒருவரையும்கண்
டறியோம் இக்கமிவ்வுலகத்திலிவ்விதமான உருவினையுள்ளவன்உண்
டாகிறது அரிது இன்னமிவ்வடிவான சந்திரவதனவொளிவை இவ்
விதமாகக்கண்டதுமில்லை கேட்டதுமில்லை ஆகையால் இப்புஷபத்
தையும் மாத்தடியில் சேர்த்துவிட்டு கிளியைக்கூண்டிலிட்டபாவனை
யாகச் செய்வதுமிகவும்நன்றென்றோத அதற்கவள் அவளின் மொ
ழியின்பேறால் அதிகசைசேதத்தோடு சம்மதியாய் ஓதமக்கையாளே
நானவனை யெங்கேகண்டுதேடுவேனென்று அதற்குஉடனே ஆறுல்நீ
ஒன்றுக்கும் விசனமடையவேண்டாம் நானவனை யழைத்து விவாக
ப் பிள்ளையாகச் சிங்காரித்து நல்ல சுகுணநாளிங்கு இன்னவாரத்திற்

னுடைய தந்திரத்தின்படி தன்வார்த்தை பாட்டைநிறைவேற்றிபிடித்தாளென்றெண்ணி புன்சிரிப்போடு ஸமன்ருப்படிநோக்கியென்றலயின் சத்தியமாக இக்து ஊன்மனதினுடைய மலரைவாடவைத்தானே அம்மனிதனுடைய வடிவினடையாள்ச்சித்திரமென்றோதிட அதனையவன்கேட்டதிக சந்தோஷத்தோடு குதித்துகுதித்து ஓநாயகியே சந்தேகமின்றிமெய்யாக இது அவளுடைய வடிவின்சித்திரமென்றோதி இப்போது நீநகையோடுமென்மேலா அதிகசந்தோஷஞ்செய்து உன்னுடைய நாட்டத்தை நாயின்முடிய நிறைவேற்றி விட்டாளென்று சொல்லி அவிடம்விட்டு வரசன் சந்நிதானத்திற்குவந்து அடிபணிந்து கைகூப்பிச்சென்று ஓ அரசனே தங்கள்குமாரத்தி தாய்தகப்பனுடைய இஷ்டத்தினபேரிலும் சந்தோஷமான மனமொத்தவளாயிருக்கிறாள் இன்னம் தாய்தகப்பனுடைய சம்மதியின்பேரில எவ்வளவும் வெளிப்பில்லாதவளா பொருவனுவளவு வேலைபுஞ்செய்பவளல்ல இன்னமென்னேரமும் தங்களுடையசந்தோஷத்தின் கூடச்சேர்ந்து சந்தோஷிப்பவள் இன்னம் நீங்களேபார்த்து ஒருதேவிற்கு மனவியாக்கினால் மதைமன்னவனென் றெப்பப்பட்டவ ளல்லது கருநிறமாகிய சைங்கியங்கள் நடுவீர்களாகில் அதைச்சந்திர கலீபனென்றெண்ணப் பட்டணத்திற்கு நன்னடப்பினை யுள்ளவனென்றுசொல்ல யதனைப்பிரோசாகேட்டு இம்மொழியால் அதிகமகிழ்வடைந்துவிவாகமுடிப்பதற்காகத் தன்மந்திரிபிரதானிகளையழைத்து இரமென்னும் பட்டணவீதி வீதிகள்தோறும் கடைவீதிகள்தோறும் மாடங்கடோறும் கோட்டைமுழுதும்விளக்க நகமுகஞ்சாந்தால்மெழுகிவீதிகளெங்கும் சண்பகப்பூ குங்குமப்பூ மல்லிகைமுல்லை இருவாட்சி இம்மலர்களினால் தோரணங்கள்கட்டும்பிரவாசர்கள்மணக்கோலத்திற்கு வரும்படி ஓலைகளெழுதும் வீடுவாசற்படிகள்தோறும் பேரிகைமுழக்கஞ் செய்யுமென்று பலவாறோதிட அதுபோலவே மந்திரிகள் மணப்பேரிகை நகர முழுதுமடிக்கவைத்தனர்.

அப்போது நகாமுழுதஞ் சிங்காரித்து வீதிகள்தோறும் விரிப்புகள் விரித்துவருபவர்களுக்கெல்லாம்கைகள்மணக்கும்படிபலவித சோறுகறிகளாக்கிப்போட்டு அவரவர்களுக்குச்செய்பத்தகுந்த மரியாதைகளையும் தானேநின்றுச்செய்துபரிகளும்தேவுகளும்காட்டியப்பெண்கள்நடனஞ்செய்யவும்பேரிகைதிண்டிமல்லாரிபூரி, தவில்முரசம்எக்காளமோடுமேளவாத்தியங்களொலிக்கும்படி பகாவலியைமணக்கோலஞ்செய்யும்படி ஆரம்பித்தனள் இதுபோலமுஷ்பாஷாஎன்னுமாசன்தாசுல்முலூக்குடையமனதிற்காகமந்திரிதந்திரிமார்களையழைத்து

நீங்களெல்லோரும் விதவிதமாகிய முத்துகளினுலிழைத்த ஆடையா பரணங்களை யணிந்துக்கொள்ளுங்கள் அதல்லாமல் நம்முடையசே னைகளையும் அதற்கு அதிகாரர்களையுஞ் சிங்காரித்துக் கொள்ளும்படி கட்டளைசெய்யுங்கள் நகர்முழுதும் அலங்காரஞ்செய்யும் பறைபறை வியுங்கள் மணத்திற்காக வருபவர்களுக்குச் சோறுகறியின் விசார ணைசெய்யுங்கள் இன்னவாரத்தில் முகூர்த்தமென்றும் தெரியப்படுத் துங்களென்று மாடகூடங்களைப் புதுக்குங்களென்றும் பலவாறுகட் டளைகளையோதிட அந்தப்படி நகர்முழுதும் சிறப்பித்து எங்கிலும் ஆட்டமும்பாட்டமும் வேடிக்கையும் யிருக்கும்படிச்செய்து அனே கமகிழ்ச்சிகளையடைந்து மஞ்சள்நீரால்விளையாடி வீதிக்குவீதி பொ ன்னூஞ்சல்களிட்டு அதின்மேலுட்கார்ந்து எதிரெதிர்முகமாகவிளையா டிச் சிலநாள்கழித்தும பிரேஷாவின் பட்டணத்திற்குப்போகவேண் டிப் பொன்கம்பத்தினிற் பனிநீறெடுத்து முத்துவெள்ளிகள் பச்சை மாகதநாற்காலின்மேல் தாசுல்முலுக்கையுட்காரவைத்து சம்பங்கி யெண்ணையிட்டுத் தலைமுழுக்காட்டி அனேகவிலைகள்பொருந்திய ஆ டைகள்தரித்து இடையில் பிரகாசம் வெண்முத்துமாலைக்கட்டி அத ன்மேல் மல்லிகை முதலிய வகைகளுக்கு பாஜிபந்துகட்டிநெற்றியி ல்மூன்றும்பிறைசொருகி பட்டிகட்டி சிரசில் மாமணிபாகை தரித்து அதன்மேல்மல்லிகைமுதலிய மலரின்மாலைசூட்டி மேகவாகனத்தின் மேலுட்காரவைத்து முன்னணியாகப் பொன்வெள்ளித் தடியின்ப டையும் பின்னணியாகப்பெண்படையும் இருபுறமும்வெண்சாமரை வீசவும் வேசிகள் ஆடவும்பாடவும் அரசர்களெல்லாம் நகமுகமுஞ் சூழ்ந்துவரும்படி மிகுந்த ஆடம்பரத்துடனே இரமெனும்பட்டணம் போக எழுந்து நடந்தார்கள் இப்பால்வருவது பகாவலியைச் சிங்கா ரித்தவிபரம்.

ஜம்பை-இ-ம்-பைரவி.

தங்கக்குடந்தானெடுத்துத் தண்ணீரதைநிறப்பி
மங்கையர்கள்மணவாடை மகிழ்வுடனேகலந்து
முத்துமணிநாதன்பதித்த பீடமதைப்போட்டு
சித்ரவடிவானபெண்கள் சீருடனேயமைத்து
சந்திரவடிவானதிரு சிறந்தபகாவலியை
சுந்திரப்பெண்களழைத்துவந்து சீருடனேயிருத்தி
சம்பங்கியெண்ணையும் தலைமுழுகச்செய்து
செம்பொன்மணியானவளைச் சிங்காரித்தாரென்று
தலைவாரிசிப்பிட்டுத் தளரமணிகோர்த்து
விலையோதமாமுடியார் மேனகைகள்தரித்தார்

அன்றுதித்தபிறைபோன்ற அழகுதிருநுதற்கு
வென்றணுதற்சுட்டியது விளங்கிடவேதரித்தார்
வேல்மனத்தான்பழித்த விழிதனக்குமாதர்
நிலமையைத்தானெடுத்து நிலைபெறவேயணிந்தார்
திருக்கழுத்திலிடுங் கண்டசரமுழுதும்பலதும்
பெருகுமுத்துமாலையோடு பிலத்தநகையணிந்தார்
கொங்கைதனைமறைத்திடவே கொண்டுவந்துரவிக்கை
மங்கையர்களிட்டார்கள் மதனுங்கண்டுமயங்க
பதந்தனக்குச்சலங்கையொடு பலநகைகளணிந்த
விதம்பெறவேதானணிந்தார் மெல்லியர்தமக்கு
சொல்லமுடியாதந்த சுரூபமதைமறைக்க
நல்லநல்லஆடைகளும் நலமுடனேயணிந்தார்
இவ்விதமாய்பகாவலியை யெல்லவருங்கூடி
நல்விழியாளிலங்கி நிலவையலங்கரித்தார்.

வசனம்.

இவ்விதமாக பகாவலியை சிங்காரித்துத் தாதிப் பெண்களெல்லாம் சுற்றிலுஞ்சூழ வானளவும் மணவாடை வீசக்கண்டவர்கள்மயங்க மிகுந்த ஆடம்பரத்தோ டிருக்குஞ் சமயத்தில் தாசுல்முலுக்கை மணக்கோலத்தோடு கொண்டுவருவதைப் பிரோஷாவென்னுமரசன் கேட்டு அவரையழைத்துவர எதிர்போகும்படி சிலரையனுப்பி யவர்கள்பட்டணத்திற்குள்வந்திட அவர்களுக்கும் மரியாதைசெய்து அழைத்துவந்து நல்லவிலையுயர்ந்த விரிப்புகள்விரித்திருக்கும் மண்டபத்தினுள்கொண்டுவந்து பெரியோர்சிறியோர்முதலிய சகலருக்கும் அவரவர்களுக்குத்தக்க மரியாதைகள்செய்து உட்காரவைத்தபின்பு சதுரில்ஆட்டபாட்டங்கள் குமுகுமென்று அதிரும்படிசெய்வித்தனன்.

அப்போது ஜமீலாகாதூன்எதிரோடிவந்து தன் சம்மந்திமார்களுக்கெல்லாம் மருக்குசெய்து தன்தமக்கையாகிய உசேனிகையைப் பிடித்து அழைத்துக்கொண்டுபோய் அனேக விநோதமகிழ்ச்சிகளெல்லாம் மூன்றுசாமம்வரைக்குஞ்செய்து பின் நாலாஞ்சாமத்தில் வேதியர்வேதமோதவும் கவிவாணர்பாடவும் சகலஅரசர்கள் வாழ்த்தவும் தலைமேல்பூமாரிபொழியவும் மங்களம்பாடவும் பெண்கள்முறையிடவும் வாத்தியங்கள்முழங்கவும் நல்லமுகூர்த்தலக்கணப்படி தாசுல்முலுக்குமங்கிலியந்தரித்தான் அப்போதுவந்த சகலமானபேருக்கும்

சக்கரைவழங்கி தாம்பூலங்கொடுத்துப் பரிமளம்பூசி பாணக்கங்குடிப் பாட்டி பின்புசடங்குகளெல்லா முடிப்பதற்காகப் பெண்ணிடத்தில் பிள்ளையைக்கொண்டுபோ யருகிலுட்காரவைத்து என்னென்ன சடங்குகள்செய்யவேண்டுமோ அச்சடங்குகளை யெல்லாமுடித்து ஆலாத்திகளுஞ்சுற்றி யிருவருக்கும் பாலமுதங் குடிப்பாட்டிப்போக வீட்டினுள் இருவரையுந்தள்ளிவிட்டு சகலமானபேரும் தங்கள்தங்களிடம்போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

அகவல்-இ-ம்-கண்டா.

மணவரையுள்ளே மங்கைபகாவலி
கணவனைக்காண காமத்தீமூட்ட
சந்திரன்போலவள் தான்வரக்கண்டு
சுந்தரமிருந்த தாசுல்முலுக்கவன்
கண்டுமெய்சோர்ந்து காசினிமீதில்
வண்டுபோல்மயங்கி மன்னன்வீழ்ந்து
நெடுநேரமட்டும் நித்திரைசெய்து
கடிமலர்மார்பன் கண்ணைவிழித்து
காமக்கூட்டைக் கண்டுகண்களித்து
தாமதித்திடவவன் றன்னாலாகாமல்
கும்பஸ்தனமேல் கொண்டனன்முத்தி
செம்பொற்கிரியைச் செங்கையாற்பிடித்து
விதிப்படிலீலைகள் விருப்புறச்செய்து
மதஜலமொழுக மன்னவன்புணர
நாடினன்மதகரி மனுவுதல்போலக்
கூடிடசரசங் கொண்டனனன்பு.

வசனம்.

இவ்விதமாகதாசுல்முலுக்கு மதனசாஸ்திரப்படி லீலைகள்முழுதுஞ்செய்திட மன்மதபாணம்பட்டுத் தேன்மாங்கனியுண்டுமுகத்தோடுமுகமும் மாரோடுமாரும் நெஞ்சோடுநெஞ்சுமாகக் கட்டியணைத்து உதட்டைக்குடித்து மதூரத்தைக்குடித்து மதனலீலைபடித்து பேரிடிபிடித்துப் பற்குறி நகக்குறிவைத்து உருண்டுபுரண்டு எழுந்துவிழுந்து ஆனந்தமடையும்போது விடியற்காலமாய் சேவல்கள் நகமுகங்கூவினது அப்போது தாசுல்முலுக்கெழுந்து ஸ்நானஞ்செய்யப்போயினன் பின்புதாகே அப்சா பகாவலிஎன்னசெய்கிறார்களோ காணவே

றுமென்று அவ்வீட்டிற்குள்வந்து பார்க்கையில் பகாவலி இராவெல்லாம் மோகச்சண்டைசெய்து அதனால்களைப்புற்றுபலகோலமாகஉதட்டிப் பற்குறியும் கன்னத்தில்நகக்குறியும் பந்துபோன்ற முலைமேல் நகக்குறியுங் கண்ணிலிட்ட அஞ்சனங் கலைந்தும் தலைமயிரவிழ்ந்தும் மணிமாலைகளறுந்தும் சிதறியும் சேலைகளவிழ்ந்தும் இப்படி நானாவிதமாகிய பங்கத்தோடுபடுத்து நித்திரைசெய்வதைக்கண்டு இவளுக்குச்சகிக்கமுடியாமல்தட்டியெழுப்பிபுன்னகையோடுஓதமக்கையேமுன்னாலென்னைநீ அந்தத்தேவுடைய காமவலையினுட்சிக்கி வேசிகளைப்போல பள்ளிப்படித்தாயென்று நீசொல்லினாயே அது இப்போது உன்னுடையநட்பினால் நன்றாயெனக்குத் தெரியவந்தது இன்றிரவில்நீ உருளப்புணர்ந்தலின் சாஸ்திரத்தை நன்றாய் எழுத்தாகவும் மாறுதலாகவும் சவிஸ்தார்மாகவும் எங்கெங்கிடுவதும் எங்கெங்கு தொடுவதும் புடுப்பதும் எடுப்பதும் குடிப்பதும் அடிப்பதும்முதலான சகல ராஜவிநோதத்தையும் நன்றாய்த் தெளியப்படித்தாய் தெரியாமைகளையுமறிந்துக்கொண்டாய் உன்வேலையைவிட்டுஒழிந்துக்கொண்டாயெனச்சொல்ல அதனைப்பகாவலிகேட்டு புன்சிரிப்போடு ஓதமக்கையே நீபேசும்போது வாயில்நீரோடும் பேசுகிறதினால் நீயுமப்படியாக காடுசிறதாய்த் தெரியவருகிறது அப்படிநீபோகிறது எனக்கு மதிகசந்தோஷமாயிருக்கிறது மெத்தவும் நலமாகவு மிருக்கிறது அப்படியாகிலதனாலவனுடைய வல்லமையும் ஆடலும் கூடலும் தேடலும் மற்ற நானாவிதலீலைகள் முழுதுமறிவாய் இன்னம் நகைப்பும் கெலிப்புமாயிருப்பாயென்றுசொல்ல அதைஎல்லாங் கேட்டுக்கொண்டு முடிவிலறுகே அபசா தன்றாய்தகப்பனுடன் விடைபெற்றுக்கொண்டு வந்த சேனைகளுடன் தன்நகரமடைந்தார்கள் பின்பு தாசுல்முலுக்கும்பகாவலியுமாகக் கூடிக்கலந்து சுகம்பெற்றிருந்தனர்கள்.

இருபதாவதுகதை.

தாசுல்முலுக்கும் பகாவலியும்

பீரோசஷாஜமீலாகாதூன் இவர்களிடத்தில்விடைபெற்றுக் கொண்டு ஷாசில்கான்பட்டணமடைந்தவிபரம்.

ஒருநாள் தாசுல்முலுக்கும் பகாவலியு மொன்றாக இருவர்மனமுமொற்றுப் பேசிக்கொண்டு பீரோசா ஜமீலாகாதூன் அவர்களிடத்திற்கு வந்து மிகுந்த வணக்கத்துடனே நின்று எங்கள் தேசம்போகவேணு மென்கிற நாட்டமுண்டாயினதென் றோத அதனை

யவ்விருவருங்கேட்டு அதிகமகிழ்ச்சியடைந்து யதிகநன்றென்றுதி
அவர்களிருவருக்கும் பணிவிடை வேலைகள்செய்ய அடிமையாகப் ப
த்துலக்ஷந்தேர்களும் எட்டுலக்ஷம் படிபாளாகிய பரிகளும் வழிச்செ
லவிற்காகப்பதினைந்து கோடி திரவியமும் முத்துமாணிக்கமும் விலை
யுயர்ந்தபச்சை பனுதிமுதலிய ஆடைகளும் நல்லவடிவுடைய சிலக
ன்னிகைகளும் சீதனங்கொடுத்த ஆடையாபரணமுதலிய் நீதிவகை
யைச் சொல்லமுடியாதளவுள்ளியோர்களுக்கொடுத்து பொன்வெள்
ளியாற்செய்து முத்துகள்பதித்த சிவிகையின்மேலிருவரையு மேற்றி
வழிகூட்டியனுப்பிவைத்தனன் அப்போதிருவ்ரும் காடுமலைவனம்வ
னந்திரமுதலிய விடங்களும் புலிகரடியானைசிம்பங்கள் நடமாடும்வ
னமும் குளிர்ந்தநிழலும் செழிப்பாய்நீரோகின்றநதிகளும் மலர்வா
டைவீசும் சோலைகளும் மதுக்கனிகளையுடைய தோப்புகளையுங்கட
ந்து தன்னகரம் வந்துசேர்ந்தான்.

அப்போது தில்பரிமகுமூதா இவர்களிருவரும்தாசுல்முலுக்கின்
வரவைக்கண்டு இறந்தவுடலுக்கு உயிர்வந்ததுபோலவும் உலர்ந்தப
யிர் மழைபெய்ததுபோலவும் எழுந்தெதிரேபோடி வந்துபார்க்கும்
போது இவ்வளவு ஆடம்பரத்தோடு சேனைதிரளுடனே இடையில்
சந்திரன்வடிவைப்போல பகாவலி நிற்கிறவடிவைக்கண்டு இருவருந்
திகைத்து தங்கள்நிலமாறி மலர்போன்ற முகங்கள்வாடி நிறங்குலைந்
து சித்திரம்போல் நிற்பதை பகாவலிகண்டு ஓஓ இதற்குள்ளேகலக்க
ங்கள் வந்துநேரிட்டதென் றெண்ணி எதிர்சென்றுபோ யிருவரையு
ங் கட்டிமாரோடணைத்துக் கழுத்தோடு கழுத்தைச்சேர்த்து ஒஎன்
னுயிருக்குயிரான தமக்கைமாரே நீங்களொன்றுமஞ்சவேண்டாம்க
லக்கமுங்கொள்ளவேண்டாம் நானுங்களுடைய மகிஷியோடுசேர்ந்
து மகிழ்வுசெய்வேன் நாம்மெல்லா முயிருமுடலும்போலு் மண்மல
ர்போலுங் கூடிக்கலந்து கலிகள்தீர்ந்து பாலமுதம்போலஒருவர்மொ
ழியைத் தட்டாமல் கலந்து வாழ்ந்திருப்போமென்று தைரியமொழி
களோதிட அப்போது அவர்களைத்தாசுல்முலுக்குகண்டு வாட்டம்
நீங்கத்தக்க உபகாரவார்த்தைகளையும புகட்டி மூவ்மலீரச்செய்துமூ
வருமாகக்கலந்து மகிழ்வடைந்து சுகித்திருந்தனர்கள்.

இருபத்தோராவதுகதை.

பகாவலிதேவேந்திரனிடஞ்சென்றது.

கொலுமுன்நடனஞ்செய்ததும் அதனால்தாசுமுலுக்கிற்கு கலக்கம்நேரிட்டதுஞ் சொல்லியவிபரம்,

௨௧-வது-பகாவலி சாபமடைந்தது.

வசனம்.

சிலஹிந்தியபுத்தகங்களிற்சொல்லியிருப்பதாவது பூமிக்கும் வானத்திற்குமிடையில் அந்தரமாக அமராநகரமென்றொரு பட்டணமுண்டு அப்பட்டணத்தைத் தேவேந்திரனென்னுமரசன் அரசாண்டுவருகிறான் அவனுக்கிரவும்பகலு முண்பணியானது ஆட்டம்பாட்டு முதலிய வேடிக்கையே வேலையிருந்தது இன்ன மவனகரத்தின்கிழாகக் கன்னிவாளும் பரிகளும் தேவுகளும் ஜின்களும் அவனெப்படிச்சொல்லுவானோ அப்படியடிபணிந்து ஏவலாட்களாகி நடுநடுங்கி நிற்பார்கள் இன்னமவன் சந்நிதானத்திரவெல்லாம் நடனசங்கீத வீணைவாத்தியங்களாகின்றதை வேடிக்கை பார்ப்பதற்காகவேண்டி சகலபரிகன்னிகளுங்கூடி வேடிக்கைபார்ப்பார்கள் அப்படிநடந்துவருகிறநாளையிலொருநாள் அந்ததேவேந்திரன் சபையோர்களைப்பார்த்து ஏனோசிலநாளாக இங்குநடிப்பதற்காக பகாவலிவருகிறதில்லை அதென்னவிதமோ' இங்குவறவேண்டாமென்று யார்நிறுத்தி விட்டார்களென்று வினவ அதிலொருபரியானது எழுந்துநின்றுகைகட்டி வாய்புதைத்து ஒடுங்கி ஓர்சனேபகாவலிஒருமனிதன்பேரிலிச்சைகொண்டவளாய் வெறிபிடித்துஎந்நேரமவனுடன் படுப்பதும் சேலையெடுப்பதும் உதட்டைக்கடிப்பதும் காமபானகம் குடிப்பதாகவுமிரவும்பகலுங் காமக்கடலுள்மூழ்கிச்சகல இஷ்டங்களையும் மறந்து அவனைவிட்டு நீங்காமலிருக்கிறாள் அவளுயிரானது அவனைக்கொண்டிருந்து பிழைத்திருக்கிறாளென்றுசொல்ல அதை அரசன்கேட்டவுடனே அவனுக்குக்கோபமென்னும் நெருப்பானது மூண்டுகண்கள் சிவந்து மீசைகள் துடிப்புறக்கடுஞ்சொல்லாக அவளை யிப்போதேயிங்குகொண்டு வாருங்களென்று கட்டளையிட பரிகள்பயந்து உடனே கட்டிலொன்றெடுத்துக்கொண்டு இந்திரலோகத்தை விட்டிழிந்து தாசுல்முலுக்கினுடைய சோலையினுட்புகுந்து தாசுல்முலுக்கினருகிற் படுத்துக்கொண்டிருக்கும் பகாவலியைத்தட்டி எழுப்பி தேவேந்திராதி ராஜனுடைய சங்கதிகளைச்சொல்ல அதைப் பகாவலிகேட்டு கிடுகலங்கி யதிகவிசனத்துடனே கட்டிலின்மேலேறிக்கொண்டுபரிகள் தூக்கிச்செல்ல அமராநகரெனும் பட்டணம்போய்ச் சேர்ந்தாள்.

விருத்தம்-இ-ம் நாதநாமக்கிரியை.

பதினறலாநிலவுபோன்ற பகாவலிகலக்கமாகி
மதிபொன்றுமங்குத்தோண்ணி மயக்கமோடெழுந்துகுன்றி
விதிப்படிநமக்குண்டாகும் வினைவெல்லலாமோ
கதியிதுதருணமென்று கடுகவேவந்திட்டாளே.

தரு-இ-ம்-நாதநாமக்கிரியை.

இந்திரன்சபைக்குவந்தாளேபகாவலி
இந்திரன்சபைக்குவந்தாளே

இந்திரன்சபைக்குவந்தாள் சுந்தரமிகுந்தமாது
அந்தரத்தோர்கள்மெய்க்க விந்தையாய்நடனஞ்செய்ய இந்

கொத்துசரப்பளியு முத்துமாலையுமின்ன
நத்துபுலாக்கணிந்து சித்திரவடிவானமாது இந்

மின்னுமின்னலைப்போல கன்னமுகிலங்க
வர்னநகையணிந்து அன்னநடைப்போல இந்

கொங்கைக்குடைகுலுங்கச் செங்கைவளையல்மின்ன
தங்கச்சிலங்கையுடன் மங்கைநடனஞ்செய்ய இந்

மயிலின்வடிவைப்போலக் குயில்மொழியாள்கன்னி
ஒயிலாய்நடைநடந்து கயல்விழிபோன்றமாது இந்

வசனம்.

இவ்விதமான அலங்கிர்தத்துடன் அரசன் சந்நிதானத்திற்கு முன்நடுநடுங்கி உடலொடுங்கி மிகுந்ததாழ்மையுடனே விண்ணப்பஞ்செய்து கைகட்டிஒடுங்கிநிற்க அப்போதரசன் அதிககோபத்தோடவளைப்பார்த்து கடுமொழிகளோதி தீயிலிடுங்கள் இவள்மனிதருடன் சேர்ந்தவளாகையால் இந்தசபைக்குத் தகுந்தவளல்ல ஆகையாலிவள் பெழுந்திருப்பாளாகில் அப்போதிந்த சபைக்குத்தகுந்தவளாவாளென் றோதிட உடனேபரிகளானது சித்திரவடிவான பகாவலியைப் பிடித்துக்கொண்டுபோய்த் தீக்குண்டத்திலெரிந்துவிட்டார்கள் அதனலவள் வெந்து நீறும்விட்டாள் பின்பு ஒருதேவகன்னி

செம்பில் ஜலங்கொண்டுவந்து ஒருமந்திரத்தையோதி யவள்மேல் தெளிக்கவும் உடனே பகாவலிமுன்வடிவோடு உயிர்பெற்றெழுந்தா ள்பின்பு அந்தராசன் சபையில்வந்துநின்று நடனஞ்செய்ய ஆரம்பி த்து முதல்சபையில் சகலபேர்களையும் அவர்கள்மனசையும்பார்வை யும் நினைவையும் பறித்துக்கொண்டாள் பின்பு நடனஞ்செய்வதிலெ ல்லோரும் தன்னைமறந்து சித்திரம்போலாய் வெறியர்போல ஆஆ ஆ ஆ வென்று வாய்விட்டு சத்தமிட்டார்கள் நகமுகமு மிப்படிப்பட்ட நடனம் நாம்கண்டறியோமென்கிற சத்தமுண்டாகும்படி தன்னு டைய இராகமுதலியவைகளைக் காண்பித்து சகலரையும் வெறியர் போலாக்கிவிட்டு இராஜனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு கட்டில் மேலுட்கார்ந்து தன்சோலையில் வந்திறங்கிப்பின்பு பநீர்நிரம்பியகு ளத்தில்மூழ்கி யுடலைச்சுத்திசெய்துகொண்டு அரசன்குமாரனருகில் வழக்கப்படிவந்து படுத்துக்கொண்டாள் பின்பு சூரியனுதயமானவு டன் வழக்கப்படி யெழுந்து ஸ்நானஞ்செய்து ஆடையாபரணங்க ளைதரித்து தன்னைச்சிங்காரித்துக்கொண்டாள் பின்புசகலசனங்களு ம் தங்கள் தங்கள் வேலையில் நிலைபாடாய்விட்டனர் பின்பதேபடிஇ ராக்காலங்கள்தோறும் தேவேந்திரன் சந்நிதானத்திற்குப்போய் மு தல்தீபில் வெந்தெழுந்து சபைமுன்னடித்து சகலரும் மயங்கும்படி மூன்றுஞ்சாம இரவுவரைக்கும் நடித்துவிடைபெற்றுக்கொண்டு த ன்னரண்மனைவந்துசேர்ந்து பனிநீர்தடாகத்தில் முழுகித் தன்கண வனருகில்வந்துவழக்கப்படிபடுத்துநித்திரைசெய்தெழுவாள் தாசுல் முலுக்கிற்குத் தெரியாது இப்படிநடந்துவருகையி லோரிரவில்பகா வலி தேவேந்திரன் சந்நிதானத்திற்குப் போயிருக்கும் வேளையில்தா சுல்முலுக்குமுழித்துத் தன்னருகில் படுத்திருக்கும் பகாவலியைக் காணமல் எவ்விடம்போயிருக்கிறளோ முழுதுந் தேடிப்பார்க்கையி ல் எங்குங்காணமல் கலகத்தோடு தன்பஞ்சணைமெத்தையின்மேல் வந்தவளின் களவைப்பிடிக்கவேண்டுமென்னும் நாட்டத்தோடுமுழி த்து வழிபார்த்துகொண்டிருந்தாப்போலவே நித்திரைபோய்விட்டா ன் அப்போதுபகாவலி தான்வரும் வழக்கப்படிவந்துமுழுகி அரச ன்குமாரன் கண்விழித்துப்பார்க்கையில் தன்னருகில் பகாவலிபடுத் திருக்கக்கண்டு அதிசயப்பட்டு அதன் உண்மையை யறியவேண்டு தற்காக மற்றுநாளிரவில் தனக்கு நித்திரைசெய்பவனைப் போல் மஞ்சத்தி லிருவரும் படுத்திருக்கும் வேளையில் பாதி யிறவானது அப்போது பகாவலியை யழைத்து கொண்டு போவதற்காகப் ப ரிகள் கட்டிலைக் கொண்டு வந்திரக்கினு ரதை பகாவலிகண்டு அவ்

குபோவதற்காகத் தன்னைச்சிங்காரித்துக் கொணடிருப்பதைப்பார்த் திஇதுதான் தருண மென்றெண்ணி யவளுக்குந் தெரியாம லெழுந் துக் கட்டிலின் காலைப் பிடித்துக் கொண்டிருக்கையில் பகாவலியும் வந்து அககட்டிலின்மேலுட்காரவும் பரிகள் தூக்கப் பறந்துபோகை யில் இவனும் காலைப் பிடித்துக் கொண்டே போகையில் பூமிக்குத் தெரியாமல் மறைந்து கொண்டே போயிற்று அதன்பின்பவளை தே வேந்திரன்சந்நிதானத்திற் கருகில் விடவும் அவளிழிந்து ஒருபுறமா யொதுக்கி நிற்கையி லிவனு மோரிடத்தில் மறைவா யொளித்துக் கொண்டு நாயனுடைய வல்லமை யைநாடி அங்கு நின்று நகமுகமு சுததிப்பார்க்கையில் எங்கனும்பரிகள் கூட்டம் கூட்டமாய் விருக்கக் கண்டு ஆச்சரியமாயிருக்கும்போது அங்குவித விதமாகிய வாத்திய ங்களும் மிருதங்கங்களும் தன்வயதிலுங் காணுததும் கேளாதது மாக நடந்துக் கொண்டிருக்கக் கண்டு தன்னுடைய சித்தமானது பிரமி த்துச் சொல்லவும் வெல்லவும் முடியாமல் நின்றுக்கொண்டிருக்கும் வேளையில் பகாவலியை எடுத்து தீயிலெறிந்து விட்டார்கள் அவள் வெந்து சாம்பலாய்விட்டாள்.

தரு-இ-ம்-புன்னுகவராளி.

அக்கினியிற்போடக்கண்டு ஆவியிழப்பானேமன்னன்
திக்குதிசையொன்றுமகாணு திடுக்கங்கொண்டானந்தவேளை
ஆசையின்கடலமுதே அன்னடைநாளேயென்று
பேசவாயில்லாமல்வாடி புலம்பனுன்மனங்கலங்கி

வசனம்.

இவ்விதமாக அரசன்குமாரன் மெய்மறந்து ஜடிபோலாய் விட் டனன்பின்பு தன்னிலெதெரியாம லிரண்டுகைகளையெடுத்து சிரசின் மேல்வைத்துத்தலையை யழுத்திக்கையைப்பிசைந்து வயிற்றைநெரு க்கி மைகசேத மென்று வெறியன் புலம்புவது போலத் தனக்குட்டா னே பெருமூச்சுவிட்டு இவ்வேளையில்நாம் அந்தப்பூச்சியாய்விடுவே னுகில் அக்கியின்கூடவிழுந்து வெந்துசாம்பலா யவளுடனே சேர்ந் துவிடவல்லமை யில்லையே இன்னம் நம்முறையாரும் கேட்பாரு மி ல்லையே நாமுறையிட்டு ஒருவரையுமறிந்திலனே யென்று பலவிசன மடைந்து குன்றிநிற்கையில் ஒரு கன்னி மந்திரியோதி திருநீற்றைக கொண்டுவந்து அந்தவெந்தநீரின்மேல் தெளிக்கவுடனே யவள்முன்

வடிவைப்போல அவ்கோடுஉயிர்பெற்றெழுந்து மகாராஜனுடைய ச
ந்நிதானத்திற்குவந்து நின்றிட அதை அரசகுமாரன் கண்டு பின்து
டர்ந்துவந்தான் அப்போதுகளரி பெரிதாயிருந்தபடியா லிவளெயொ
ருவரு மின்னுளென்று மின்னாரானென்றும காணவில்லை இன்னும
வர்களெயின்னாரின்னாரெனறறியான் அநுலக்கோரிடத்தில் நின்று
க் கொண்டிருக்கையில் ஆட்டந்துவக்கமாயினது அப்போது பகாவ
லியினுடைய மத்தளக்காரன் கிழவனுயிருந்த படியால் மத்தளமடி
க்கவல்லமையில்லாமல மெதுவாக அவனெப்படி யடிப்பானே அது
போலவே குந்திகுந்தி நடனஞ்செய்து முகத்தைச் சுருக்கியவன்புற
மாகப் பார்த்தாடிவருகையில் அதைத்தாசுல முலுக்கு கண்டு மனந்
தாளாமல் கிழவனாகிய மத்தளக்காரனிடத்தி லடித்து நானீதடிப்ப
தில்மிகுந்த சகலவலலமையுள்ளவ னெனனிடமாக கிருபைசெய்துக்
கொடுத்தால் நானவள் நடிப்பதற்குத் தகுந்தாபோ லடிப்பேனெனக்
கேட்க அதற்குக்கிழவன்சம்மதித்து அவன்கையில் கொடுக்கஅவன்
மத்தளமடிக்க ஆரம்பித்தான் தாசுல் முலுக்கும் மத்தளமடிப்பதில்
அதிகவல்லமையுடைய வனுகையால் பகாவலி நடிப்பதற்குச் சரியா
கவடித்திட அவ்வடியினுலும் அவ்வாட்டத்தினுலும் சகலபேருங்க
ண்டு பிரமித்துச்சுவாமுதலிய மரங்களெல்லாம ஆஹாஆஹாவென
வும் ஒரே சத்தமாய் விட்டது அவ்வேளையில் தேவேந்திரராசனும்
மெய்மறந்து சந்தோஷக் கடலில் மூழ்கி அவ்வாட்டத்தின் மகிழ்ச்சி
யால் தன் கழுத்திலிருந்த கோடிபொன் விலைபெற்ற இரத்தினபதக்
கத்தை மத்தள மடிப்பவன் கையிற் கொடுத்துவிட்டுப் பின்னுமதிக
நடனஞ்செய்திட அதைராஜன்கண்டு சந்தோஷமாய்ப் போகவிடை
யளிக்க விடைபெற்றுக் கொண்டு எவ்விதம் போகிறுளே அவ்வித
மாகவேதன் சோலைவந்துசேர்ந்தனன்.

பின்பகாவலி தான்விழக்கப்படி பனிநீர்குளத்தில்முழுகப்போ
யினுளப்போது அரசன் குமாரன் வழக்கப்படி மஞ்சத்திற் போய்ப்
படுததுக்கொண்டனன் பின்னுமவளும் போய்ப் படுத்துக்கொண்டி
ட அவன் அதேகியாபகமாய்ப் பொழுதுவிடிந்த வுடனே யெழுந்து
புன்னகையாக நகைத்தனன் அப்போதவள் நீ யெப்போதும் சிரிக்க
வழக்கமில்லாத சிரிப்பு என்னத்திற்காகச் சிரித்தாயென்று பகாவலி
கேட்க அதற்கரசகுமாரன் இன்றிரவில் நான் அதிசயமானதொ
ன்று கண்டேன் அதனு லெனக்கு அடிக்கடி புன்னகைவருகிற தெ
ன்று சொல்ல அதற்கவள் காயனுதவி செய்யவேணும் நீ கண்டதினை
வை நான்கேட்கும்படி சொல்லென்றுகேட்க அதற்கரசகுமாரன்பா
தியிரவிற்குப் பின்னெங்குசெல்கிறுய் எனக்குத்தெரிவிக்கிறது மில்

லையென்று சொல்ல அதைப்பகாவலிகேட்டு நம்முடைய மருமமெல்லா மிவனுக்குத் தெரியலாயினதே அல்லது நம்முடன கூட அங்கு வந்திருந்தானோவென்று அச்சங்கொண்டுதிடுக்கிட்டுவெகுநேரம கலங்கினளு ஆனாலுங்குறவில்லை இதன்பூர்வோத்திரமெல்லாம் எவ்விதத்திலாவது அறிய வேண்டு மென்று பின்னும் நீ இதற்கு மேலே ன்னகண்டாய் சொல்லென்று கேட்க அதற்கரசகுமாரன் இன்றிரவில் உன்கூடநானும பரிகள்மீயேறிப் போவதற்காக கொண்டு வந்தகட்டிலின் காலைப்பிடித்துக்கொண்டு நீ உட்கார்ந்துக் கொண்டுபோனையே அப்போது கூடவே வந்தேனென்று சொல்ல அதைப்பகாவலிகேட்டு உனக்குஎன்மேல் சத்தியமாக நீஉமதுகண்ணினல் பார்த்தவைகளையெல்லாம் சொல்லவேண்டுமென்றுகேட்க அதைக்கேட்டரசன்குமாரன் சிறிதுசொல்லிநிறுத்த அதக்கவளானை யிட்டுக்கேட்க இப்படியே ஆதியோடந்தமாக சொல்லித் தன்விரிப்பின் தலையணியையநீக்கி அதன்கீழ் முவைத்திருந்த பதக்கத்தை யெடுத்துக்காட்டிட அதனைக்கண்டு பகாவலிமார் மேலடித்துக் கொண்டு மூர்ச்சையாய் விழுந்தனள்.

பின்புதெளிந்தெழுந்து ஓஎன்பிராணநாதனே யுன்னுயிருக்குப் பகவானுகி விட்டாயே மன்னவனே மகாபுருஷா வென்று கலங்கி உனக்காகவேண்டி நானென்னுடைய தாய்தகப்பனிடத்தி லெவ்வளவு வருத்தங்களையடைந்தேன் இன்னம்அக்கம்பக்கத்தாரென்னை நகைக்கும்படி எவ்வளவு நிந்தனையான இழிவின் பேரெடுத்தேன் இன்னமுனக்காக நித்தியகாலம் தீயில் வெந்துபோவதையு மொப்புக் கொண்டேன் இப்படிஎல்லா மெனக்கு எத்தனை எத்தனையோ யிடுக்கண் வந்துநேரிட்டது அதுகளெல்லா பொருத்துக்கொண்டு உன்னைநான் கைவிடவில்லை இந்நாட்டத்தைவிட்டு அகத்திருப்பவில்லையே ஆகையாலிவைகளை நீயேயோசித்துப்பாரென்று சொல்லிப்பின்னும் உன் கண்ணால் இவ்வேடிக்கையெல்லாம் முடிவானது அதைச் சொல்லும்படியான நாட்டம் யாதொன்று மில்லை ஆனல் அக்கூட்டத்திற்கு நீவராதிருந்ததேநன்னயிருந்தது நானுன்னைவிட்டுப்பிரிந்துபோய் வருகிறவரைக்கும் நீவருத்தமெடுத்திருப்பதே நலமாயிருந்தது அதனாலெனக்கு என்னகதிநேரிடுமோ இப்போதுநான் கைசேதப் பட்டவளாயிருக்கிறேன் இப்போதுன்னைநான் கொண்டுபோகாவிடில் முடிகிறதுமில்லை கொண்டுபோன லெதுவரைக்கு மொளித்து வைப்பேன் நல்லமுதலானது இக்கட்டலையெப்படி யிருக்கிறதோ அப்படித்தான்முடியும் இன்றிரவு முன்னுடைய பாக்கியத்தை சோதிப்பதற்காக என்கூடக் கொண்டு போகிறேன் அங்கு உன்னு லெனக்கு எ

ன்னேறிடுகிறதோ அதையுமனுபவிக்கிறேன் ஆனல் நாயன் முன் னிட்டகட்டளைப்படி முடியுமல்லது வேறில்லையென்றெண்ணி வழ க்கப்படி யங்குகொண்டுபோய் இராசன்முன்னின்று பணிந்து கைக ட்டிவாய்புதைத்து இன்றுநான் மத்தளமடிப்பதில் தேர்ந்த வல்லவ னெருவனையழைத்து வந்திருக்கிறேன் தங்களுத்திரவானல் இங்கு வந்தடிக்கும்படி செய்கிறேனென்று மனுவுசெய்ய அதனைராசாகேட் டு அதிசந்தோஷமடைந்து அழைத்துவரும்படி விடைகொடுத்தன ன் அதுபோலவே அவனையழைத்திட இவள்கடிக்கவும்அவன்மத்தள மடிக்கவும் அதனல்சகலபேர்களும் திகைத்து வெறியர்பேலமருளா னாகள்இராசாவும்மெய்மறந்து அதிகசந்தோஷமடைந்து அந்தசபை யிலுள்ள சகலருங்கேட்கும்படி பகாவலியைப்பார்த்து யிப்போதுன க்கென்னவேண்டுமலா யிருக்கின்றதோ அதனைக்கேள் தருகிறேனெ னென்றுசொல்ல அப்போதுபகாவலி மிகுந்தகாட்டிமையுடனே ம காராசாவினுடைய வாழ்வைக்கொண்டு அடியாளுக்குயாதோர்வஸ் துவுக்குங்குறையாமலிருக்கின்றது இதனலஇந்தமத்தளக்காரனெரு வனைத்தவிர எனக்கோர்குறைவுமில்லை இவனுடையஉயிரை மன்னி க்கவேண்டுமென்றுசொல்லஅதனைத்தேவேந்திரன்கேட்டுஅதிககோ பத்தோடு இராஜகுமாரனைப்பார்த்து கண்டிப்பானமொழியாகநீயா மானிடர்வடிவானவன் நீயவளையிச்சிக்கவுமவளுனனையிச்சிக்கவுமாயி னது அதிகநல்லது அவளுடையருசியை நீகண்டவன்உன்ருசியைஅ வள்கண்டவள் அதனலொருவர்க்கொருவர் விருப்பங்கொண்டீர்கள் நீயாதொரு வருத்தமுமில்லாமல் பரிகுலத்தாளையிங்கிருந்து கொண் டுபோகமாட்டாய்இன்னமுன்னுடைய விலாப்பக்கம் சூடேறும்படி கட்டியன்னைத்துப்படுக்கமாட்டாயென்றுசொல்லி பின்புபகாவலியின்பு றமாகத்திரும்பி அடிபெண்ணே நானென்ன செய்வேன் நானுன்னை யாதொன்று செய்வதில்லையென்றுவாக்களித்துவிட்டேன் இப்போ துனக்கு பனிரண்டுவருஷம்வரையிலிடைமுதல்கால்வரைக்கும் கல் லாகப்போகக்கடவதென்று சாபங்கொடுத்துவிட்டனன் அந்தசாபப் படியே முடிந்து விட்டது அதைக்கண்டு தாசுல்முலூக்கு புலம்ப லானன்.

விருத்தம்-இ-ம்-புன்னுகைவராளி.

விதிப்படிசாபத்தாலே விளைந்ததுபகாவலிக்கு
மதியொன்றும்நிலையில்லாமல் மன்னவன்மயங்கியோங்கி
சதிவந்துசேர்ந்ததென்று சஞ்சலமிகுதியாகி
கதிகளைநினைத்துகுன்றி கதறியேபுலம்பினனே,

தரு-இ-ம்-செஞ்சுருட்டி.

ஆதியேயிறைவனே — சோதிநாயகனே
அமைத்தாயேபுவியில் — என்னை
மேதினியிலடியவன் — மெலிவாலொடுக்கியே
வினையுளாகினேனே
வர்னமாலாதற்கு — மணமில்லாமல்போல
மணிலாகினேனே — வானில்
மின்னுமதியொளி — நீங்கியவாறுபோல
மிடியனுகினேனே
கனியில்லாச்சோலேபோல் — காட்டினிலவைப்போல்
காணுமற்போகினேனே — தான்
அநியாயப்பாவியாகி — அழுதுபுலம்பிட
ஆவிகுன்றினேனே
தலைவிதிதப்பிடாது — சஞ்சலம்போய்விடாது
தரணியிலுள்ளவர்க்கு — வாரி
அலைகடல்கடந்தாலு — மம்புவியாண்டாலு
அமைவிலைநீங்கிடாது
இறைவாவெனக்கொன்றும் — வராமல்கார்த்திட
என்னைமீட்டிடு — நான்
முறையிடுமுறைதன்னை — முழுதும்நீதந்திடு
முடிவில்லாப்பொருளே

இருபத்திரண்டாவது கதை.

தாசுல்முலுக்கு கரிந்தீவுஅடைந்ததும்
அங்குபகாவலியைக்கண்டதும் இன்னம்
சித்திராவதி ராசன்குமாரத்தி தாசுல்முலுக்கின்பேரில்
ஆசைகொண்டவிபரம்.

வசனம்.

தேவேந்திரனுடையசாபத்தாலேபகாவலி கல்லாய்ச்சமைந்து அங்கில்லாமல் மறைந்துவிட்டாள் அப்போதரசன் குமாரர் அவளைக்காணமல் இரசத்தைப் போலமனந்தடுமாற்றங்கண்டுகலங்கி விழுந்து புரண்டழுதுக் கொண்டிருக்கையி லிவனேயார் பரியெடுத்து மேலேயெறிந்திட தாசுல்முலுக்குஒருகாட்டில்போய்விழுந்துமூன்றுநாள்வரைக்குமூர்ச்சையாககண்திறக்காமலிருந்து நாலாநாள்கண்திறந்துபார்க்கையில் தன்னருகிலிருக்குமனவியைகாணமல்முட்கள்நெருங்கி யிருக்கக்கண்டு திடுக்கிட்டெழுந்து சிரமேற்காத்தைவைத்து அங்குமவ தெருக்கள்தோறுஞ்சென்று பகாவலியினுடைய சங்கதியைவிசாரி

த்துகேட்டனன் இவ்விதமாவனமுழுதுந்திரிந்து வருகையிலொருநா
ள் மரகதத்தினாலிழைத்திருக்குங் குளமொன்று கண்ணிற்குத்தோற்
றலாயினது அங்கடந்துபார்க்கையில்விதவிதமான கனிகளுள்ளவிரு
க்ஷங்களும் குளிர்ந்தநிழலுமாகப்பொன்வெள்ளியினாற்செய்த ஏணி
லொன்றிருக்கக்கண்டு அரசன்குமாரனுஞ் சிலநேரமிருந்து இளைப்பாற
வேணுமென்று அங்குபடுத்திருக்கையில் அப்படியேபகாவலியின்ஞி
யாபகத்தோடே நித்திரைபோய்விட்டான் அவ்வேளையில்சிலபரிக்கூ
ட்டங்கடந்து இக்குளத்தில்தலைமுழுகிவிளையாடிவிட்டு தறயேறித் த
ங்கள் தலையுரோமங்களையுலர்த்திக்கொண்டு நிற்கையில்அதிலோர் க
ன்னியின்மார்வை படுத்துநித்திரைசெய்யுமரசன்குமாரன்மேல்விழு
ந்தது அகோரபடுத்திருப்பவனை பகாவலியினுடையமத்தளக்காரனெ
ன்றுசொல்லினது அச்சொல்லைக்கேட்டவன் கண்ணைத்திறந்து அப்
பரிகளைப் பார்த்து பகாவலியிருக்குமிடத்தின் சங்கதியுங்களுக்குயா
தாயினுந்தெரியுமா வென்றுவினவினன் அக்கன்னிகள் அவனதிகவிச
னத்தோடுகேட்டதைக்கேட்டு அதிகமனமிரங்கி நீயவளைக்கண்ணுற்
கண்டதில்லை ஆனால்நாங்களுங்கண்ணுற்காணவில்லைபகாவலியினட
யிலிருந்துகால்மட்டுகல்லாய்ச சமைந்துசங்கத்தீவிலொருகோயிலி
ருக்கின்றது அக்கோயிலினுள் ளிருக்கிறாள் அக்கோயில்பகலெல்லா
மிரவெல்லாம் பொழுது விடியுந்தனிலுந் திரககிறதென்றுகேள்விப்
பட்டிருக்கிறோம் என்றோத அதைதாசுல்முலுக்குகேட்டு அந்தத் தீ
வுஎந்தபுறமிருக்கிறதென்றுகேட்க அதற்கவர்கள் நீபோகும்வழியில
டையும்வருத்தங்களொருபுற மிருந்தபோதிலும்உன்வயதளவு நடந்த
போதிலுமங்குசேரமாட்டாயென்றோத அதைககேட்டுதாசுல்முலுக்
குஆசையற்றவனாகஒடுங்கி வாழ்வினம்பிக்கையற்றவனாய் முட்டிமோ
த ஆரம்பித்துக்கல்மேற்றலையுடைத்து கொள்ளமோதுகையில் அத
னைக்கன்னிகள்கண்டுவீணாயுயிரையிழந்துவிடுகிறானென்றுமனமிரங்
கி யெல்லாருமொன்றாய்க்கூடி யாலோசித்து அங்கிவனைக் கொண்டு
போய்விடுவோம் இவன்விதியிலுள்ளதை யனுபவித்துக்கொள்ள வெ
ன்று ஒரு நொடிக்குள்ளாக அங்கொருவண்டு பறந்துபோய்ச் சேர்
துவிட்டதுகள்.

பின்பரசன்குமாரன்ஒருவினாடிக்குள் தன்விசனத்தைவிட்டுநீங்
கி நோக்கையில்ஒருஅழகாகியபட்டணந்தெரியலானது அப்பட்டண
த்தின்சுற்றிலு மூன்புறத்திலும் உன்னதமாகிய கனிகளும்பூக்களும்
நெருங்கியசோலைகளும் மாடகூடங்களும் ஆண்பெண்கள் நல்லவடி
வினையுள்ளவர்களுமாகக்கண்டு அதிகசந்தோஷமு மகிழ்வுமடைந்துசுற்
றிவந்து கடைவீதியின்புறமாகப்போகையில் அங்கோரெளியபிராம

ணனைக்கண்டு அவனைக்கண்டு அவனோடுசந்தித்து இப்பட்டணத்தி
ன்பேரென்ன அரசன்பேரென்னஉன்பேரென்ன நீ யென்னதொழி
லானென்னவினவ அதற்குஅவன் இந்நகர்தங்கள்திவு இப்பட்டணத்தர
சன்பேர்சித்திரவதனென்றும நான்கோவிலின்பூசாலி என்றுமசொ
ல்ல பின்னுமவனை இங்குளத்தனைகோவிலுண்டு அதில்பிரஸ்தமான
கோயிலெத்தனை மறைவானகோயிலெத்தனை யுண்டென்றுவினவ அ
தற்கவன் சிலநாளாயிங்கு கடற்கரையோரமாக ஒருகோயிலுண்டு. அ
க்கோயில்பகலெல்லா மூடப்பட்டு இறவெல்லாந் திருக்கிறதென்று
சொல்லஅதனையரசகுமாரன்கேட்டு அதிகமகிழ்வடைந்துகடற்கரை
யோரமாகப்போய் அக்கோயிற்கண்டு அதன் வாசற்படியின்மேலுட்
கார்ந்துக்கொண்டிருக்கையில் பொழுதுமறைந்து கருக்குயிலானது
அப்போதுதானாகஅப்பூட்டுத்திறந்துக்கொண்டது. அப்போதரசன்
குமாரன்அதனுள்ளடைந்து பார்க்கையில் பகாவலிபேர்பாதிகல்லாய்
சமைந்து சுவற்றில்சாய்ந்து உட்கார்ந்துக்கொண்டிருக்கக் கண்டுவிச
னமடைந்தனன் அரசகுமாரன் வரவைக்கண்டு எவ்விதமாயிதனுள்
வந்தாயென்றுகேட்க ஆதியோடந்தமாகச் சகலசேதிகளையுஞ்சொல்
லி இரவெல்லாமிரண்டுபேரும் பேசிக்கொண்டிருக்கையில் விடியற்
காலமாய்விட்டது அப்போதுபகாவலிநீபொழுதுதிக்குந்தனிலுமிங்
கிருப்பாயாகில் நீயுமென்னைப் போலாய்விடுவாய் இங்கிராமம்போய்
விடென்றுசொல்லி தன்காதிலிருந்தமுத்திலொன்றைக்கழட்டியவன்
கையிலீந்துவினவிறறு சிலநாள்வரைக்குஞ் சீவித்திருமென்றோதிய
னுப்பினள் அதையரசன்குமாரன் வாங்கிக்கொண்டு பட்டணத்திற்கு
ள்வந்துஅதனையோ ஆயிரம்ரூபாயிற்கு விக்கிரயஞ்செய்துஒருவனை
க்கொண்டு பண்டுபலாதிகளைச்சேகரஞ்செய்து கொஞ்சம் ஆள்களை
யும்வைத்து யிப்படி சிலநாள் வரைக்கும் பகல்முழுதும் பட்டணத்
துள்ளும் இரவு முழுதும் பகாவலியினிடத்திற் சென்றும்பசிக்கொ
ண்டு வருவதாயுமிருந்தனன் இப்படிநடத்திவருங்காலத்தில் அப்ப
ட்டணத்தா ரனேகர்இஷ்டர்களாயினர்கள் அப்போதொரு அரசகு
மாரன் தன் இஷ்டக்காரர்களை யழைத்துக் கொண்டு நகர்சுற்றிவரு
கையில் தலையுமேலுந்திறந்தப் போலப்பிச்சைக்காரர்களுடலே யுடு
த்திக்கொண்டு ஒருகூட்டமாக வருவதைக்கண்டு அரசகுமாரன்தன்
சினேகிதரை நோக்கியிவர்களுடைகள் பிச்சைக்கார ருடைகளாகவு
ம் வடிவுகளைப்பார்த்தால அரசகுமாரர்களுடைய வடிவைப்போலு
மிருக்கின்றது ஆனாலிதன் மருமமநாயனறிவான் ஆகிலுமிவர்களிப்படி
யிருப்பதென்னவென்றுகேட்க அதற்கவர் இவர்களெல்லாம் காமபா

ணம்பட்டு அதனால் மோகக்கடலில்மூழ்கி ஆசையென்னுந்தீயில்வந்து அலைகின்றவர்கள் இதிலரசகுமாரர்கள் சிலமந்திரிகுமாரர்கள்சிலர் இவர்களெல்லாம் இப்பட்டணத்தி னரசன குமாரத்தியின்மேலிச்சைக்கொண்டு வெறியவர்பால தங்கள்வாழ்வையிழந்து திரிகின்றார்கள் அதேதெனில்.

அகவல்-இ-ம-கண்டா.

மதிபோல்வதனமும் வளர்பிறைநுதலும்
கதிர்வாள்கண்ணும் கண்டவர்மயங்க
குடம்போற்றிரண்ட கும்பஸ்தனமும்
தடம்போலுயர்ந்த தளதளப்புள்ளதாம்
கண்டவர்மயங்கக் கதிர்வடிமேனியாள்
பெண்டுகள்தன்னில் பேரழகுள்ளவள்
ஆசையைக்கொடுக்கும் அழகுள்ளவல்லி
மோகத்தொழிலில் மூழ்கியமங்கை

வசனம்.

அப்பெண்ணின் வடிவைப்போல் உலகிலெங்கணுமில்லை அப்பெண்மானோதேனோ மயிலோகுயிலோமதியோ உடுவோவெதுவென்றுசொல்லுவோம் இன்னம்அநகராஜகன்னி எப்படிப்பட்டவளெனில் இசுலாமானவர்கள் வீணுக்கொலை செய்யப்பட்டவர்கள் இன்னமவளிடத்தி லிரண்டு பேரை வைத்திருக்கிறாள் அப்பெண்களிரண்டுபேரில் ஒருத்திபெயர் நாமவாவென்றுங்கூட்டுக்கள்ளிமற்றொருத்தியின்சகலாவென்றும் சொல்லுவார்கள் இவர்களிருவருஞ்சூதுவாது எடுத்துசுத்து இவைகளில தேர்ந்தவல்லவளாயிருக்கிறதுந்தவிர அவர்களைத்தனக்குக்கீழிருத்தி தனக்குபுத்திமதிகள் சொல்லும்படி நியமித்து அவருமனமொத்துநடந்துவருகிறார்கள் விவாகத்தில்தங்கள் தங்களிஷ்டப்படியுண்டு தாங்கள்யாரை யின்பிப்பார்களோ அல்லது பரியாசஞ்செய்வார்களே அதுதவிரவே ஒருவர்சொல்லை யேற்றுக்கொள்ளுகிறதில்லை இன்னமிதுவரைக்கும் அவர்களின் கண்ணிற்கு நிற்பமானவன்யாரும் அகப்படவில்லை இனியுமென்றும் சம்மதிப்படவில்லை யென்றுசொல்ல அதனை அரசகுமாரன்கேட்டு சும்மாயிருந்தான் ஒருநாளரசகுமாரனங்கணியைநாடி அவளின்மாடத்தின்புறமாகப்போகையில் அங்குசிலர்கூட்டமாகச்சேர்ந்து வெறியர்புலம்புவதுபோலதனக்குள்ளே தனக்குள்ளேதாங்களே தாங்களேவாயில் வந்ததெல்லா மவளின்மேல்கொண்டகாமவிரகதாபத்தால் பேசிக்கொண்டிருக்கிறார்களங்கு இவனும்போய்ச் சேர்ந்தனன் அப்போது அக்கன்னிசாளரத்தின் வழியாக இவர்கள் புலம்புவதை யெல்லாம்பார்த்துக் கொண்டிருக்கையிலங்கு தாசுல்முலுக்கு நிற்கிறதைக்கண்டு மின்னலினால் கண்ணொளிமயங்கி விடுவதுபோல மயங்கி மூர்ச்சையாய்விழுந்தனள்.

தரு-இ-ம்-தோடி.

பாங்கிமாரே நானென்னசெய்வேன்
தோழிமாரே நானென்னசெய்வேன்

பஞ்சணைமெத்தைபேரில் படுத்தாலுநித்திரையும்
கொஞ்சமும்பிடிக்கவில்லை கொற்றவன்மேலாசையினால்-பாங்

நெஞ்சிலிடிமாறவில்லை நெருப்புயெரிவதுபோல்
மிஞ்சிமிஞ்சிப்போகுதாசை மன்னவனைக்காணவென்று-பாங்

இருக்கவிருக்கமோகம் எழுப்புதேமென்மேலாகப்
பொருக்கமுடியவில்லை பூவையரேயின்றெனக்குப்-பாங்

எலையின்மெழுகுபோல் யுருகுதேமேனியது
தலைவிதியோயெனக்குச் சஞ்சலம்பெருகுதடி-பாங்

என்னைப்பிரிந்திடாமல் இருந்திடமன்னவனை
முன்னைக்கொண்டுவந்துவிடும் மன்னவனைச்சேரயின்று-பாங்

வசனம்,

இவ்விதமாக மாணிக்கவல்லி விரகதாபத்தால் புலம்ப அப்போது நர்மவா வென்னுங் கூட்டுக்கள்ளியும் கமலாவென்னும் வட்டகொள்ளியிவர்களிருவரும் ஓடோடியும்வந்து எடுத்து மார்போடணைத்து முதுகின் மேல்பன்னீர் தெளித்து அத்தரை முகரவைத்து மூர்ச்சைத் தெளியவைத்து ஓமயிலேகுயிலே நீ எப்போதுமிப்படியாகாமல் இன்றிவ்விதமான காரணமென்னவென்றுகேட்க அதற்கொன்றும்மறுமத்தைச் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டிருந்திட அப்போது கமலாவென்பவளே சாளரத்தின்வழியாக வீதியை எட்டிப்பார்க்கையில் அங்குபூரணச்சந்திரனைப்போல அரசகுமாரன்நிற்கக்கண்டு இக்கன்னிகையிவ்விதமூர்ச்சையானது இவனைக்கண்டு இச்சித்துமயங்கினளென்றெண்ணி உடனே அந்தராஜகன்னிகையைப்பார்த்துநீபட்டபாட்டால்எங்களை வெறியர் போலாக்கிவிட்டாய் நீபொறுக்குதலில்லாமல் துரிய ஆத்திரப்பட்டாய் உனக்கித்தனை பதைபதைப் பேன் நீஎன்னத்திற்காகத்தடமாறுகிறாய் உனக்கெவன் சம்மதியாகவே யிருக்கிறான் நீயொன்றுக்குமஞ்சாதே நீ நீலவர்ணக் குதிரைக்காரனைக்கண்டு உன்வடிவை இப்படிமாறுதலாக்கிக்கொண்டாய் இப்பவுமவனுன்னை விட்டுப்போகான் இன்னமவனைவிலக்க ஒருவராலும்முடியாது ஒருநொடிக்குள்ளே அவனை மாயவலைக்குள் சிக்கவைக்கிறேன் நீபார்

அவனிப்புறமப்புறம் அசைய வல்லமை யற்றவனாய் ஓரடி முன்னே வைக்காதிருக்கும்படி செய்கிறேனென்று சொல்லி ஒருதூதுக் கள்ளியை யேவி அவனுடைய சக்தியை உண்மைப்படுத்துவதற்காக ஏவ அவள் மினுக்கிக்கொண்டு அன்னம்போல் ஒய்யாரநடைநடந்துவருகிறது அரச குமாரனுடைய குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு இருட்டுக்கள்ளியிரண்டுமேமொழியாக ஓ இராசனே நீஇப்படிப்பட்டணத்தின் சேதியையறியாய் இதுகொலைசெய்யநகரமென்றும் இக்குதார ஆசையால் வந்தோர்களைத் தூக்கி விடுவதென்றும் இப்பட்டணத்தின னரசகுமாரன் கன்னிகையின் ஒவ்வொருரோமத்தினு மறிவாளிகளைமயக்கிச் சுருக்கிடப்பட்டவள் இன்ன மதன்கண்பார்வையினால் காமர்களைமயக்கிச் சுருக்கிடப்பட்டவள் இன்னமதன்கண்பார்வையினால் காமங்களைமயக்கிக் காமவிடாதி மேலிடச்செய்துமண்மேல்விழுக்காட்டப்பட்டவள் அவளால் இவ்வுலகமே மயங்கிப்போயிருக்கின்றதே அப்படிப்பட்ட வல்லமையுடையவளென்று அறியாமனநீஇங்குமங்குமாக எவ்வல்லமையைக்கொண்டு திரிகிறாய் இன்னமரசனுடைய மாடத்தின்புறமும்பார்க்கிறாய் ஆகையால் நீநெருப்புத்துண்டு போலிருக்கிறாய் தீபம் போன்ற வடிவினையுடைய பெண்களின் மனதை யுருக்கப் பட்ட கொல்லனா யிருக்கிறாய் இன்னம் கற்போன்ற மனதை நீர் போலாக்கப்பட்ட வல்லவனாயிருக்கிறாய் ஆனாலுங்குறைவில்லை நீ எங்கிருந்துவந்தாய் நீ எங்கிருக்கப்பட்டவன் இன்னமுன்னுடையவமிசமும் இருப்பிடத்தையும்சொல்லென்றுகேட்டிட அவைகளையெல்லாம் தாசுல்முலுக்குக கேட்டு இவள்யாரோ அனுப்பியதூதாளென்று அவள் மொழியினால் தெரிந்துக் கொண்டு ஓவானின்மின்னே பெண்ணே கண்ணே மயிலே மாச்சோலை வாழுங் குயிலே நீயேன்வீசுகிறாய்என் முன் பேசுகிறாய் என் மனதுள்ள மறைந்திருக்கும் காமத்தீயை ஏன்கொளுத்துகிறாய் இன்னாப்புண்ணாயிருக்கிறவன் மனதிற்கு நீமூலாமிதே என்னுடைய நகரின்பெயர் தேயமுழுதும் சூரியனொளியைப்போல் விளங்குகின்றது என்பெயர் உலகினரசர்களுக்கெல்லாம் சிரசின்மகுடமுடியாயிருப்பேன்நானேயாத்திரைசெய்பவன் இன்னம்சேயானம் பேதலிப்புள்ளவன்என்பேரில் இந்நாட்டம்செய்யவேண்டாமென்று சொல்லிவிட்டான்றேறுதினன்அதையவள்கேட்டு இவன் பெயர் தாசுல்முலுக்கென்று இவனுடைய பட்டணத்தின்பேர் ஷாகிஸ்தானென்று அறிந்துக்கொண்டு திரும்பி வந்து சித்திராவதியரசன் குமாரத்திக்கு இச்சேதியையெல்லாம்தெரியப்படுத்தினள்.

அன்று முதலாக அரசகுமாரன் தினகாலம் விதவிதமாகிய ஆடைகளணிந்து சிங்காரித்துக்கொண்டு அவ்வீதியின்புறமாகப்போக்குவரத்துமாக யிருந்தான் அவ்வரசன் குமாரத்தி இவன் மேல்கொ

ண்ட ஆசையினால் நாளுக்குநாள் பதினைந்துநாளிற்கு மேற்பட்டநில வு குறைவது போலக்கரைதலாயுடல் மெலிந்து மனம்வாடி யசைவற் றுநிற்கசிலநாளகழிந்தது பின்புமறைவாயிருந்த சங்கதி வெளியாயி னது அப்பொழுது தாய்தகப்பனிடச் சேதியையறிந்து மகள்நாளுக குநாள் குறைந்துக்கொண்டுவருவதினால் அதிகவிசனமடைந்து அவ் வரசன் குமாரனிடத்திற்குப்போய் பெண்ணை விவாகமுடித்து கொ ள்வதற்காக அவனுக்குமியர் சிதகிக்கும்படியான சொற்களையெல்லா ம் கற்பித்துக்கற்பில்கல்லைக் கரையச்செய்யும் வல்லவ னொருவனையர சன் குமாரனிடத்திற்கனுப்பினான் அத்தூதன் அரசகுமாரனிடத்தி ற்குவிரைந்தோடிவந்து சித்திராவதி தேசத்தரசன்சேதியும் அவன் குமாரத்தியின்சங்கதியும் மணம்புரியுஞ்சங்கதியும் ஆதியோடந்தமா கச்சொல்ல அதையரச குமாரன்கேட்டு அத்தூதனோடு நீ யரசனுக் கு என்னுடைய விண்ணப்பத்தைச்சொல்லி நான் என்னுடைய நக ரைவிட்டுமகுடமுடியிழந்து சிநேகிதர்களையும் பிரிந்து அநேகவருத் தங்களை யடைந்து யாத்திரைசெய்து நகர்திரிந்து வருபவனுக்கு இ வ்விதஞ்செய்யநாடுவதெப்படிநீர்மேல் சித்திர மெழுதியதுபோலும் காற்றைப்பிடித்து கரத்திலடைத்து வைப்பதுபோலு என்று அரச னுக்குசொல்லுமென்றுசொல்ல அதை அத்தூதன்கேட்டும் ஓடோ டியரசனிடம் வந்து அரசகுமாரன் சொல்லியதைச் சொல்லிமணம் வேண்டாமென்று மறுத்தானென்றுரைத அதை அரசன்கேட்டு விச னமடைந்து மந்திரியை யழைத்து இச்சேதியைத் தெரிவித்திட அ தைமந்திரிகேட்டு ஈதென்ன ஆச்சரியமாயிருக்கின்றது அரசர்களொ ன்றை நாடினால் அதை முடிப்பது மந்திரிகள்பேரில் கடனாகையால் தங்களுக்கு முன்பாகவே அவனை எவ்விதத்திலாவது மோசஞ்செய் து மடக்கி யொடுக்கித் தாங்கற் நினைத்த கோறிக்கையை முடித்து விடுகிறேன் பாரென்றுரைத்திட அதற்கரசன் எவ்விதமென மந்திரியவ னை காளவரண்டவனென்கிறவனே ஒப்புக்கொள்ளும் படிசெய்து உ ன்னாட்டத்தை நிறைவேற்றி விடுகிறே னென்றுரைத்தினன் அதையரச ன்கேட்டு அதிகமகிழ்வடைந்தனன்.

தாசுல்முலுக்கிற்குக்கையில் காசில்லாதபடியினாலே பகாவலியி டத்திற்குப் போகவேணுமென்று நாட்டங்கொண்டபோது இதற்கு முன் துடைக்குள்வைத்திருக்கும் மாணிக்கமிருக்கிறதென்று கியாப கம்வந்து உடனே ஒருவனை யழைத்து தன்துடையை கீறச்சொல்லி அம்மாணிக்கத்தை வெளிப்படுத்தி அம்மாணிக்கத்தை கையிலெடு த்துக்கொண்டு அப்புண்ணிற்கு மருந்திட்டுமாணிக்கத்தை விற்பனை செய்வதற்காக ஒருவியாபாரியினிடத்தி லீந்திட அதையவன்வாங்கி

ப்பார்த்து ஆச்சரியப்பட்டு இச்சேதியை மந்திரிக்குத் தெரிவித்தனை தமந்திரிகேட்டு அவனைப் பிடித்துவரும்படி சேவகர்களையனுப் பிப்பிடித்துவரச்சொல்லிப் பார்க்கையிலிவன் இராஜனுகிய மனிதனு யிருக்கக்கண்டு கோபிக்கை முடிவானிதென்றெண்ணிசசிறையிலடைத்துவிட்டான் பின்பரசனேடுவளர்த்த ராஜாளியோடிப் போனதைத்தேடிப் பிடிப்பதற்குமுன் தானு அகப்பட்ட பாவனைபோல் நாம்நினைத்த யரசகுமாரன் தானுகவேவந்து வலையிற் சிககிகொண்டான் இப்போ தெனக்குத் தெரியவருகிறது நாம் சொன்னபடி அவன்கேட்பானென்றேருதினன்.

இருபத்துமூன்ருவது கதை.

சித்திராவதி இராசகுமாரத்தியைத் தாசுல்முலுக்கு

விவாகம் முடித்தது.

இன்னம்பகாவலியிருந்த கோயிலைப்பிடித்தவிபரம்.

வசனம்.

சித்திராவதி இராசன்மகளை தாசுல் முலுக்கு மணமுடித்துக் கொள்வதற்க்கவேண்டி யவனைச்சிறைச்சாலையிலடைத்து அவனுக்கு அதிகவருத்தங்களைககொடுத்தான் அதனுல் தாசுல் முலுக்குச் சிறைச்சாலையைவிட்டு வெளியேவாராமல் அதிகவருத்தமடைந்துவெளியே வர முடியாதலாலும பகாவலியைக காணுதலாலும் மனந்தடுமாறித் தன்னறிவு நிலையில்லாமல் அதிக விசனத்தால் அழுதழுது பொறுக்கமுடியாமல் பூமியின்மேல்விழுந்து சுவரில்தலையை மோதிக்கொண்டுமுட்டிமோதிப் புலம்பியழுகத்தொடங்கினன்.

தரு இம் சங்கராபரணம்,

விளையுள்ளாகினேனே இறையவனே விளையுள்ளாகினேன்
விளையுள்ளாகினேன் விதிப்படியின்றுநான்
தனியேசிறைக்குள்ளாகிச் சலித்துஅழுதுமாள வினை
தலைவிதியொருநாளும் தப்பாதுலகோர்க்கு
அலைகடற்பிறந்தாலும் அன்றுவிதிதப்பாது வினை
வருத்தத்திற்குள்ளாகினேன் வலிகளொடுங்கிப்பாவி
தந்திரமுறும்படி சதிமோசத்தாலிக்கு வினை
அரசுநிலையுமற்று உளவற்றவனுமற்று
பரதேசிப்போலின்று பார்வருத்தமாக வினை
வாழ்வுநிலைநில்லாது வறுமையும்நிலையாது
தாழ்வுநிலையாதிப்போ தனித்தேன்மனதுநொந்து வினை

வசனம்.

இவ்வித மர்தச் சிறைக்குள் ளிருந்து நானுவித மாகத் தனக்குள் தானே கலங்கிப் புலம்புவதை சிறைச் சாலையின் அதிகாரன் கண்டு ஓடோடியும அரசனிடம வந்து அறுப்புண்ட சேவல்போல் அச்சிறையிலகப் பட்டவன் இரவும்பகலுமழுது மண்ணிற் புரண்டு

உருண்டு அழுவதைப் பார்க்கில் வீணுயுயிரைமாய்த்து விடுவானென்னத் தோன்றுகின்றதென்று சொல்லவதையிராசன் கேட்டொன்றுஞ்சொல்லவில்லை பின்பரசன் தன்குமாரத்தியாகிய பகாவலியை யழைத்துநீயகு அரசன்குமாரனிடத்திற்சென்று உன்மாயாவல்லயை யவன்மேல்வீசி யுன்மேலிச்சிக்கும்படி செய்துக் கொள்ளென்றுரைத்த அதையவுள்கேட்டு அதிகமகிழ்வடைந்து காண்போயாளாகிய நாமலாகசலாவெனு மிருவரையுங்கூடவழைத்துக்கொண்டு இம்மூவருமாக அன்னம்போல்நடந்து அரசகுமாரனிருக்குஞ் சிறைச்சாலையுள் வந்தார்கள்.

அகவல்-இ-ம்-தோழி.

மின்போலிலங்கு மெல்லியாளன்று
தன்மேல்மோகம் தானவள்கொள்ள
தாதிமாரோடு தடங்கலில்லாமல்
போதுபோய்பூவையான போசனங்கொண்டு
மயில்போல்மினிக்க மயல்வலைகொண்டு
குயின்மொழிபோலக் குலுக்கிநடந்து
அரசனிருக்கும் அவ்விடமாக
வரிசையாய்மாது மகிழ்வுடன்வந்தாள்.

அப்போதரசன் குமாரன் அம்மூவரி லொருவரையும் எரெடுத்துப்பார்க்கவுமில்லை அவர்கள்கொண்டுவந்த வஸ்துக்களில் ஒருவஸ்துவின்பேரிலும் பார்வையுமில்லை மாணிக்கவல்லியிதனைக்கண்டு நாம்கொண்டுவந்த வஸ்துகள்பேரிலும் நமதுபேரிலும் கொஞ்சமாவது கண்ணேறிட்டு பார்க்கவில்லையென்று துக்கக்கடலில்மூழ்கி ஒன்றும் பேச வல்லமையற்றவளாய் அரசன் குமாரனெதிரில் விழுந்து அறுப்புண்ட சேவல் துடிப்பது போல புரண் டுருண்டு பதைத்துக் கிடப்பதை யரசன் குமாரன்கண்டுமிகவும் பாம்புஎலியை மூச்சாலிழுத்து கொள்வதுபோலவெழுந்து அவளை யெடுத்து தன்மடியின்மேல்வைத்து முகத்தோடு முகத்தைசேர்த்து அதிகபிரியஞ்செய்தனன்.

அதேனெனி லிவ்விதஞ் செய்யாவிடில் நாமிச்சிறைச் சாலையைவிட்டுவெளிப்பட முடியாதென்று யோசித்து அவளை மணமுடித்துக்கொள்ள சம்மதியானான் பின்புவைகளை எல்லாம் லாசப்லாவெனு மிருவருங்கண்டு அதிக சந்தோஷமடைந்து அரசனிடம் வந்து இந்தச் சேதியெல்லாம் தெரிவித்தார்கள் அப்போது மாணிக்க வல்லி நாதினைத்துப்போன் புஷ்பமகப்பட்டது மடிநிறைய கட்டிக்கொண்டு வந்தோமென்றெண்ணி அவளுந் தன்மனை வந்து சேர்ந்தனள் அப்போதரசன் சிறையிலடைத்து வைத்த தாசுல்முலுக்கை வெளி

கொண்டுவந்து சம்பங்கிஎண்ணெயிட்டு தலைமுழுக்காட்டிநல்ல வஸ்திரங்களணிவித்து மாலையுஞ் சிங்காரித்திருவருக்கும் நல்லமுகூர்த்த வேளையில் மங்கிலியந்தரித்து செய்யத்தக்க சடங்குகள் எல்லாமுடித்து இருவரையும் மணவறையிலுள்ளனுப்பினார்கள் அப்போது நர்மலாவும் சாமலாவும் சிங்காரித்துக்கொண்டு அங்குவந்து அரசன்குமாரன்முன் அநேகபரியாசமான வார்த்தைகள் பேசிட அதனைசெவிகொள்ளாமலெப்புறமு பேரிட்டுப்பார்க்காமல் தலைகுநிந்தவனைகவிருந்தனன் பின்புபாதியிரவுடனே தாசுல்முலுக்குஎழுந்து இரவும் பகலும் காணுகதால் பகாவலியைநாடி யவளிருக்கும் கோயிலுட் சென்றான் அங்குகோயிலு இரவில் வரும்ரசன்குமாரன் அன்றைதினம் வராததால்பகாவலி வெறிபிடித்தவள் போல புலம்பிக்கலங்கி தலையை முட்டிமோதிக்கொண்டு அதிகதுக்கத்தோடிருந்தனள் அப்போ தாசுல்முலுக்குவரக்கண்டு அநிகசந்தோஷமாயின பின்பவன்கையினல் பின்பவன்நகங்களில் ஐவண்ணமிட்டிருக்கக்கண்டு அதிக கோபமாகி இரண்டுகண்களும நெருப்புபோலச் சிவப்புற்று அதிகவருத்தத்தோடு ஆ, ஆ, ஹ, ஓ, அரசன்குமாரனே நீஎன்ன வேலைசெய்தாய் நீயனுசையுற்றவளைப் பேரையு மழித்தாய் நீவர்ணமேற்றிக் கொணடுவந்தாயென்று தலைமேலடித்துக்கொண்டு இப்படி புலம்பத்தொடுத்தாள்.

பகாவலிசொல் கொச்சகம்.

மன்னவனேஎன்னாலே மதிமயங்கிவையகத்தில்
கன்னியரெல்லாம்நகைக்க காசினியிற்பேரானே
இன்னபடிசெய்வாயென் றெண்ணியிருப்பேனுகில்
உன்னுடனேசேருமனம் ஒருபோதும்வைத்திடேனே

புலம்பல்-தரு-இ-மீ-சங்கராபரணம்.

என்னவேலைசெய்தால்மன்னவனே — என்னைவிட்டு
எங்கிருந்தாய் இத்தனைநாள்மட்டும — என்பிராணநாதா
உன்னைநினைத்துவுருகிக்கருகினேன் — என்பிராணநாதா
ஒருநொடியும்நான்மறந்திலனே — என்பிராணநாதா
வெந்துளமுமேவன்தின காலநெருப்பில் — என்பிராணநாதா
மாயவலைக்குள்சிக்கினயோநீ — என்பிராணநாதா
அடித்தாரெந்தன் அன்னை தந்தையரும் — என்பிராணநாதா
அதையும்பொறுத்தேனுனக்காயன்றுநான் — என்பிராணநாதா
பிடித்தார்களவையடைந்தார்சிறையினில் — என்பிராணநாதா
பின்னும்முன்னும்விருத்தமாகினேன் — என்பிராணநாதா
ஆலைவாயின்கரும்புபோலானேன் — என்பிராணநாதா
ஆசைகொண்டபாசத்தாலுன்மேல் — என்பிராணநாதா

சோலைவாயின்குயிலாயிருந்தேனே என்பிராணநாதா
சோருதலினாலாருதல்செய்தேன் என்பிராணநாதா
எல்லாவிதமுங்கண்டுமறந்தாயே என்பிராணநாதா
பொல்லாவிதியாகினேனுன்னால் என்பிராணநாதா
போரும்போருமாசைமன்னவனே என்பிராணநாதா

வசனம்.

இப்படிநானாவிதமாகப் பகர்விலாசவும்பேசவும் அழவும் விழவும் அவளொன்றுசொல்லவும் அதற்குஇவனொன்றுசொல்லவும் இப்படிப்பட்டபலவிதமான மகிழ்வும் துக்கமும்சேர்ந்து பலமொழிகளைப்பேசுகையில் அப்போராசகுமாரன் மாணிக்க வல்லியினிடத்திலகப்பட்டதும் சிலசிறையிலகப்பட்டதும் மணம்வேண்டாமென்றதும் அதனால்தான் அதிகவருத்தமடைந்ததும் கடைசியி லவளை மணம்புரிய ஒப்பினதால் சிறையை மீண்டதும் ஆதியோடந்தமாகச் சொல்லிவந்தனன் அதற்குள்விடியற்காலமும் மருகில்நெருங்கிற்று அவ்விடம்விட்டுநீங்கி வீடுவந்துசேர்ந்து மாணிக்கவல்லியிலன்பஞ்சணையிற்படுத்து நித்திரைபோயினன் இதுபோலவே இரவில் பகாவலியிடத்திற்குப் போயிருப்பதும் பகலில்மாணிக்கவல்லியினிடத்திலிருந்து பகல்முழுதையும் கதையினாலும் விளையாட்டினாலும்காலங்கழித்துவந்தனன் இப்படிவருவதால் மாணிக்கவல்லி அதிகவிசனமாய் தனமனதுக்குள்தானே ஒருநாயனே இதென்ன புதுமையா யிருக்கின்றது நானேயவன் பேரில்மோகித்து அநேகதந்திரம் செய்து என்தலையள்ளகப்படுத்தியும் இஞ்சிற்றுவது என்பேரிலாசை வையாமலும் என்னகர்மந்திரியை யவிக்காமலும் அவன்மனம் கல்லாயிருக்கிறதே இருவருமோரேவிட்டிலிருந்தும் சுகம்பெறாமலிருப்பது பெரியஆச்சரியமாயிருக்கிறதே என்றுபுலம்பினள் இப்படி சிலகாலங் கழிந்திட ஒருநாள் மாணிக்கவல்லி தன்தகப்பனிடத்திற்குப்போய் அடிபணிந்து யதிகதாக்ஷிமையோடு இந்தச்சேதிகளை எல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்லினள் அதையரசன் நல்லதவன் பகல்முழுது முன்னிடமிருந்து இராமுழுதும் வெளியே போய்விடுகிறானல்லவா நல்லது இரவில் அவனெங்கு சென்று என்னவேலை செய்கிறானென்பதையறியவேண்டுமென்று அவனுக்குத் தெரியாமல் சிலரை யழைத்து அங்கங்கே காவல் வைத்து நீங்கள்இரவில் தாசுல்முழுதுக்கு வருவானாகி லவனுக்குத்தெரியாமல் ஒளித்து பின்தொடர்ந்து அவனெங்கு போகிறான் என்ன வேலை செய்கிறானென்று கண்டறிந்து வாருங்களென்று கட்டளையிட அதுபோலவே சேவகர் பதுங்கி யிருப்பதை அரசன் குமாரனறியாமல் வழக்கப்படி எழுந்து திரைகளையுடைய கடற்கரையோரமிருக்கும் கோயிலுட் சென்று அங்கிருக்கும் பகாவ

லியுடன் விடியற்காலமட்டும் பேசியிருந்து வந்ததைக்கண்டு அச்சேதியை அரசனிடம்வந்து தெரிவித்தார்களதை யரசன்கேட்டுப் பொழுது விடிந்தவுடனே சேவகாளைவிட்டு அடியோடே அக்கோயிலைப் பிடுங்கிக் கடலிலெறிந்து விடுங்களென்று கட்டளையிட்டானதுபோலவே சேவகர்கள் அன்றையப்பொழுதே கோயிலை பிடித்து சமுத்திரத்திலெறிந்து மட்டமாக்கிவிட்டார்கள் பின்பு தாசுல்முலுக்கு வழக்கப்படியே கடற்கரையோரம்போய்ப் பார்க்கையில் அக்கோயிலிருந்தவிடமே அடையாளந்தெரியாமற்போயிற்று அதனால் தாசுல்முலுக்கு வெறியனைபோல் பூமியில்விழுந்து புரண்டழுதுக்கொண்டு இக்கவியைப்பாடினன்.

தாசுல முலுக்கு சொல்-விருத்தம்-இ-ம்-பைரவி.

வேதன்மொழியாளைக்காண தினந்தோறும்வருவதேபோல
வாண்மின்னாற்போர்மன்னன் அங்கிகேபார்க்கும்போது
கேடன்முடிக்கோயில்காணக் குறிப்பொன்றுந்தோன்றாதாலே
தான்மிகப்புலம்பியங்கு தரைதனிலுருண்டிட்டானே.

புலம்பல்-தரு-இ-ம்-தோடி.

அரசுதனையிழந்து அலைதிக்குள்ளானேனே இறையே
கரிபரிசேனையைவிட்டுக்கால்வழிநடக்கலானேன் இறையே
புலம்பிப்புலம்பிநின்றுபுரண்டிங்கழுகலானேன் இறையே
கலங்கிக்கலங்கிநின்றுகதறிபழுகலானேன் இறையே
கண்டுமொழியாளையின்றுகாணாமற்போகினேனே இறையே
பெண்டுளன்னமாவின்றுபுலம்பியழுகிறாளோ இறையே

இவ்விதமாகப் புலம்பிப் புலம்பி கடைசியில் அழுதழுது ஆசையற்றவனாய் இதுவரைக்கும் கம்ம முழுதும் ஒரு பிரயோசனமுமில்லை என்று தன்மனதுள் பெருமையென்னுங் கவலையெடுத்துச்சுமந்துக்கொண்டு கைசேதமிட்டு மாணிக்க வல்லியினுடைய மாடத்திற்குச்சென்று படுத்திருக்கையி லப்போதவள் தாசுல் முலுக்கு மதுரமான மொழிகளைப் புகட்டி தன்பேரில் மோகிக்கும் படிசெய்து சிப்பிமழைத்துளியை நிறப்பிக்கொள்வது போல் அவனோடு மோகித்துத் தன்வயிற்றை நிறைப்பிக்கொண்டு ஆசையின்பமெல்லாம் பெற்றுக்கொண்டனன்.

இருபத்துநாலாவதுகதை.

செக்கான் வீட்டில் பகாவலி பிறந்ததும்
சித்திராவதி பட்டணத்தரசன் குமாரத்தியாகிய மாணிக்கவல்லி
தாசுல்முலுக்குடன் சேர்ந்து ஷாகிஸ்தான் பட்டணம்
சேர்ந்தவிபரம் தாசுல்முலுக்கு பிறந்தவிபரம்.

௨௪-ம். அரசன் கடற்கரை யோர மிருந்தகோயிலை அடியோடே பிடுங்கி எறிந்து விடு மென்ற படியே வேலைக்காரர்கள் பிடுங்கி எடு

த்தெறிந்துவிட்டு வெறுந்தரையாக்கிவிட்டிட அப்பூமியிலோர்வாணியன்எள்ளுவிரைத்திட அவ்வெள்ளுச்செடிகள் களகளவென்று பசுமைநிறமாக முளைத்திருப்பதை யரசகுமாரன் கண்டுபகாவலியினுடைய விசனத்தினாலே அவளைக்காணாதவனாய்ப் பிரமைகொண்டு அங்குசென்றுதன் வியாகூலத்தையாற்றிவருகையில் அச்செடிகள்பூவிட்பூத்தது அதனழகினால் தாசுல்முலக்கு தினகாலமிருவேளையு மங்குச்சென்றுஅவள்மேல்கொண்ட ஆசையினால் ஒருகவிபாடி எப்போதவள் முகத்தைக் காண்போமென்ற மோகத்துடனே எண்ணங்கொண்டவனாயிருந்தான்.

அதன்பின்பு நாளுக்குநாள்காய்கள்முற்றி அதுகதும்பக்குவமாகிய வாணியன் யதுகளையறுத்துவந்து உலரப்போட்டு அதையாடி எண்ணெயெடுத்தனன் ஆனால்வாணியருடைய வழக்கமானதுதின்னத்தக்க வஸ்துவில்எண்ணெயெடுத்தாள் புண்ணாக்கைமுன்னமவர்கள் தின்பது வழக்கமாதலால் அவ்வழக்கப்படியே செக்கான்மனைவி அவ்வெள்ளின் புண்ணாக்கைத்தின்னவும் நாயன் கட்டளைப்பின்படி அவள்கெற்பவதியாய் ௯-மாதம் நிறைந்து பத்தாமாதமொரு பெண்ணை மஹாசுந்தரமாகப் பெற்றாள் அச்செக்கான்வீட்டிலெப்போதும் தீபமேயில்லை அப்படிபட்டவீட்டிற்கு இப்பெண்ணேஒருதீபமாய்விட்ட பின்பு இச்சேதிநகர்முழுதும் வாணியன்வீட்டில் சுதந்தரமாக ஒரு பெண்பிறந்து ௪-நாளாயிற்று அவளின்முகத்தினழகைகண்டால் பதினாலாம்பக்கத்துநிலவே வெட்கிப்போகும் இன்னமவளுக்கு௧௪-வருஷமாகுமேயானால் சூரியனும் வெட்கிப்போவான் தேவகன்னிகைகளும்சரியாகமாட்டார்கள் அவளழகுக்குமற்றொருவரும்ஈடாகமாட்டார்களென்று தேசங்களெங்கும்பிரசங்கமாயிருக்கஇச்சேதிதாசுல் முலுக்கினுடைய காதில்விழவும் அப்போ [illegible] இவ்வடிவானபெண்பிறந்தது அந்தஎண்ணெயினுடையகுணமாயிருக்குமென்றெண்ணி உடனே செக்கானையும் அப்பெண்ணையும் தன்னிடங்கொண்டு வரும்படி தூதனை யனுப்பிட அதுபோலவே வாணியன்தன்மகளை அரசகுமாரன் முன்கொண்டுவந்தான் அப்போதரசகுமார னப்பெண்ணின் வடிவை யுற்று நோக்கிட தாசுல்முலுக்கின் கண்ணிற்குத்தன்னுடைய காமகூடாதியபகாவலியின் வடிவைப்போலத் தோற்றளாயினது அதனாலதிசந்தோஷமடைந்து பகாவலி மறுபிறப்பாகப் பிறந்தாளென்றெண்ணினான்.

பின்புசெக்கானிடத்தில் அதிகநீதியளித்து நீயிந்தப்பெண்ணைப் பத்திரமாக வளர்க்கவென்று உத்திரவு கொடுத்தனுப்பினான் அன்

றுமுதலாக நிலவுவளர்வதுபோலவளர்ந்து ஒன்பதுவயதுநிறைபாடாயினது அப்போது வாணியன் பாத்தியஸ்தர் நகரமுகத்திலு மிருந்து வந்தப்பெண்ணைக் கேட்கத்தலைப்பட்டார்கள் அதைக்கேட்டு வாணியன் நமக்குஅரசகுமார னிப்பெண்ணைப் பத்திரமாக வளர்க்கவென்று கட்டளையிட்டிருக்கிறானே நாமொட்டிலநம்முயிருக்கே யூனம் வந்துநேரிடுமென்றெண்ணி வந்து கேட்போர்க்கெல்லாம் இப்பெண் ருதுவானபின் இவள்யாரைநாடுவாளோ அவனுக்குமணஞ்செய்துகொடுப்பெனென்று சொல்லிவிட்டான் அப்படி நடந்துவருங்காலத்தில் அப்பெண்ணிற்குப் பத்துவருஷமும்நிறைந்து ருதுவாயினாள் அப்போதாசுல்முலுக்கு அப்பெண்ணைதனக்கு விவாகஞ்செய்துகொடுக்கும்படி வாணியனிடத்திற்கு ஆளொன்றனுப்பினான் அதைசெக்கான் கேட்டுத் துடிதுடித்து பதைபதைத்து இராசன் மருமகனுக்கு நாம் பெண்ணைக்கொடுத்து நமதுமருமகனாக்கிக்கொள்ள எளியவனாகிய நமக்கு எவ்வளவல்லமையுண்டென்று தனக்குள் தானேயோசித்தரசன் தன்குமாரத்தியை அவளுக்கு அடியாளாகவாயினதேயென்று பெருமூச்சுவிட்டனன் அதையவன்குமாரத்திகேட்டு ஓஎன்தந்தையே நான்பரியின்குலத்தாள் என்பெயர்பகாவலி நீயொன்றுக்கும் அஞ்சவேண்டாம் என்மொழிமெய்யென்றேஉறுதிக்கொள் மரகதத்திலிருக்குந் தாழம்பூவெளியேவாராவிடின் அதின்மணந்தெரியாது சிப்பியின்வயிற்றிலிருக்கும் முத்து அரசர்களின்கிரீடத்தில் தரிக்காவிடில்பிரகாசந்தோன்றுகிறதில்லை ஆகையால்நீவந்தஆளுடன் இன்னுஞ்சிலநாளரசன்குமாரனை மணம்பொறுக்கச்சொல்லுமென்று சொல்லியனுப்பென்றாள் அதைவாணியன் கேட்டுச் சும்மாயிருந்தான் அப்போதுவந்ததூதன் இச்சேதியையெல்லாம் தாசுல்முலுக்குடன்சொல்ல அதையவன்கேட்டு அதிகசந்தோஷமடைந்து அத்தூதனுக்கநேக வெகுமதிகள்கொடுத்தனுப்பினான்.

பின்புபகாவலியினுடைய சாபநாளுந்துலைந்து விட்டது அப்போது நகரமுகமிருந்து கணக்கில்லாத பரிகளும்வந்ததுகள்பின்புசமன் ரூப்பரிநல்ல வஸ்திரங்களும்நகைகளும் நகைகளுமெடுத்துக்கொண்டனேகம் பரிகளுடன்முத்து மாணிக்கம் பதித்தசிம்மாதனமொன்று எடுத்துக்கொண்டு அவ்வாணியன் வீட்டிற்கு வந்து இறங்கினார்கள் அதைபகாவலிகண்டுபதிநசந்தோஷமடைந்து ஆடையாபரணம் தரித்துக்கொண்டு தனக்குத் தகப்பனாகிய வாணியன் வீட்டின்புறமாக அழைத்துக்கொண்டு போய்முன்னால் புதைத்துவைத்திருந்த ஒருபுதையலைக்காண்பித்து இதிலிருக்குந் திரவியத்தையுன்வயது பரியந்த

ம்புசித்துச் சுகமடைந்திருவென்று சொல்லி விட்டுபின்பந்தச்சிம்மா
தனத்தின்மேலேறி உட்கார்ந்து பரிகளை தூக்கச்சொல்லித்தாசுல்மு
லுக்கு மாணிக்கவல்லி நர்மலசபலா இவர்கள்உட்கார்ந்திருக்குமிடத்
திற்குக் கொண்டுபோங்களென்று விடைகொடுத்தாள் அதுபோல
வேபரிகள் தூக்கிப் பறந்துகொண்டு அவ்விடத்திலிறக்கினார்கள் அப்
போபகாவலி எல்லாக் கன்னிகைகளையும் நிறுத்திவிட்டுத்தான் ஒரு
த்தியே தனியாக அம்மாடத்தினுட்சென்றுமின்னல்மின்னினாற்போ
லிருக்கும் மாணிக்கவல்லியினுடைய இரண்டுகைகளையும் பிடித்துக்
கழுத்தோடே கட்டியணைத்துமுத்தியிட அதனைமாணிக்கவல்லிகண்டு
இதென்னயிருந்தாப்போலிருந்து இப்படியாயினதேயென்று திகில
டைந்து ஒருபுரமா ஒதுங்கியிருந்தாளப்போது பகாவலிதாசுல்முலு
க்குடன்தன்வாவின்சேதிகளையெல்லாம் ஆதியோடந்தமாகச்சொல்லி
ப்பின்பு மாணிக்கவல்லியின் புறமாகத்திரும்பி உனக்கிவ்வரசன் கு
மாரன் மேலாசையிருக்குமாயின் எழுந்திருவென்றுசொல்ல அதனை
மாணிக்கவல்லி கேட்டு எனக்கிவ்வரசகுமாரன் உடலுக்குயிரின்பா
வனைபோலிருக்கிறேனென்றுசொல்ல யதனைபகாவலி கேட்டுதன்கூ
டவந்த பரிகளைப்பார்த்து நீங்களெல்லோருந்தெரியும்படி வெளிப்
படுங்களென்று சைகைசெய்திடப் பரிகளெல்லாம் நாலங்குலமிடமி
ல்லாமல் எங்கெங்கனும்ஏகபிரளயமாய்நிறைந்துவிட்டார்கள் அத
னால்நகர்முழுதுமிச்சேதி பிரசங்கமாய்நகர்முழுதுங்கலக்கமாய்விட்ட
துஇதனைராசனறிந்து அதிக்கலத்தோடும் மிக்கஅச்சத்தோடும்தன்
னரண்மனையைவிட்டுத் தன்குமாரத்தியினுடையமாளிகையின்புறமா
கஓடிவருதைத் தாசுல்முலுக்குகண்டு எதிராகச்சிலதூரம்வந்து சந்தி
த்தழைத்துக்கொண்டுபோய் தன்னிருப்பிடத்தில் உட்காரவைத்துச் ச
கலசங்கதியும் ஆதியோடந்தமாகப் பகாவலியின்சேதியெல்லாந்தெ
ரிவித்தான்அதையரசன்கேட்டு கலக்கந்தெளிந்து அதிகசந்தோஷமா
ய்த்தன்மகள் மாணிக்கவல்லியின்கரத்தைப் பிடித்து பகாவலியின்காத்
திலீய்ந்து எனக்குஇவள் அருமையாகியதவத்தினால பிறந்திருக்கிற
குமாரத்தி இவளொருத்தியே தவிரவேறொரு பெண்ணில்லை உனக்
கிவளை அடிமைப்பெண்ணாகப்பணிவிடைவேலைசெய்யத்தந்திருக்கிறே
ன் ஆசையால் இவளை அதிகப்பிரியத்தோடு வைத்திருக்கவேண்டு
மென்று ஒதிவிடையீந்துப்போயினான் பின்புதாசுல்முலுக்கு சிம்மா
தனத்தின்மேலேறி வுட்கார்ந்தான் அப்போது வலதுபுறமாகப் பகா
வலியும் மாணிக்கவல்லியும் முன்பின்னாகநர்மலாகபுலாவுமாக உட்கா
ர்ந்தவுடனே அக்கன்னிகளந்தச் சிம்மாதனத்தையெடுத்துப் பறந்து ஒ
ருநொடிக்குள் தாசுல் முலுக்கினுடைய சோலையிற்சென்று அரண்ம

னையின்முன்பில் சிம்மாதனத்தை யிறக்கி விட்டது அச்சேதியை முன்னால்தான் பட்டணத்திற் கரசனாகிப் போயிருந்தகையினால்முலுக்கினுடையமந்திரிகுமாரனாகியமாரிகு பஹிருவென்றுகேட்டு தாசுல்முலுக்லசகாண காணிக்கையெடுத்துக்கொண்டு அதிகசந்தோஷத்துடன் எதிரோடிவந்து தன்தலைமுறைபெயரும்சொல்லிவைக்க அதைக்கேட்டுத்தாசுல்முலுக்கதிகக்களிப்படைந்து அவனுக்குஅநேகவெகுமதிகள்கொடுத்துவிட்டுப்பின்பு அரண்மனைக்குட்புகுதவும் மகுமூதாவும் தில்பரியுங்கண்டு அதிகமகிழ்வடைந்து பின்பு இந்நான்குபெண்களும் தாசுல்முலுக்குப் பாலும்பழம்போல கூடிக்கலந்துமகிழ்வுற்றிருந்தார்கள்.

இருபத்தைந்தாவதுகதை.

தாசுல்முலுக்கு தன் தகப்பனுக்கும்.

இன்னம்பிரோஷாமுச்பாஷா இவர்களைக்காண்பதற்காக சடிதமெழுதியதும் இன்னம்மந்திரியின் குமாரனாகிய பகிறா கே அப்சாவின்பேரில் இச்சைகொண்டவிபரம்.

வ-ம். ஒருநாள் தாசுல்முலுக்கும் பிரோஷாவிற்கும்முச்பாஷாவிற்கும் ஜசஇல்முகிலுக்கும் தனக்ககேஷமசங்கதிகளும் தனவரவின் சங்கதிகளும் ஆதியோடந்தமாகவொருகடிதமெழுதியனுப்பினான் அதனையவர்கள்வாங்கிவாசித்திட அதனபயனகளெல்லாம் தெரிந்லாய் அதிக மகிழ்வுற்றனர்கள் பின்புபிரோஷாவும் தானேஜமீலாவுமாகபுறப்பட்டார்கள் இன்னம்முச்பாஷாவும் உடனேஆறுருவும்கூடறாகே அபசாவுமாக இவர்களும்புறப்பட்டார்கள் இன்னும்சையினல்முலுக்கும் தன்மனைவியோடும் அளவற்ற சேனையெடும்புறப்பட்டனன் இப்படிஇவர்களெல்லாம் ஒவ்வொருகூட்டமாக மிகுசந்தோஷத்துடனே வழிநடந்து நிகரேனும் பட்டணம்வந்து சேர்ந்தார்கள்பட்டணத்தில்ஊசிநாட்ட இடமில்லாமல் நெருங்கிஎங்கணும்மனுப்பிரளயமாய்விட்டதப்போ தாசுல்முலுக்குவந்தவர்களுக்கெல்லாமல் நெருங்கிஎங்கணும்மனுப்பிரளயமாய்விட்டதப்போ தாசுல்முலுக்குவந்தவர்களுக்கெல்லா மதிகமரியாதைசெய்து நகரமுழுதும்சிங்காரித்து மூன்றுநாள்வரை நல்லருசிகரமாகிய விதவிதமானபோசனங்கள் சமைத்து விருந்தளித்து ஆட்டம்பாட்டமாகஅநேகவேடிக்கைகள்செய்து இன்பம்பிறக்கச்செய்தனன் நாலாநாலாநாள் வந்தவர்களெல்லாம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்கள பட்டணம் போய்ச்சேர்ந்தார்களப்போது பகாவலிறாகே அப்சாவைச் சிலநாள்வரைக்கும் தன்னிடத்தி லிருக்கும்படிகேட்டு நிறுத்திக்கொண்டனள் அப்போது பகாவலி றாகே அப்சாவுக்காகப்படுக்க இருக்க ஒருமெத்தையை ஒழித்துக்கொடுத்துப் பினபிருவருமாகிகப் பாதியராவுவரைக்கு கூடிககலந்து விளையாடியிருந்து பின்புபகாவலி தன்னிடத்திற்கும் றாகே அப்சாவின் தன்னிடத்திற்கும் போய்வழச்சப்படி படுத்துநித்திரைசெய்தார்க

கள் இப்படிநிகழுங்காலத்தில் ஓரிரவில் ருகுஅப்சர ஆமலாத்ரை செய்யும்போது அவள் கூந்தலவிழ்ந்து ரோமத்திட்டிருக்கும் மத்தியிலொன்றுவெளியாகி இலங்கிக்கொண்டிருக்கிறது அன்றிரவில் நிலவின்காந்தியின் பிரகாசத்தினால் நித்திரைவாராமல் மந்திரியின்குமாரனாகிய பயிருஎன்பவன் அச்சோலையைச்சுற்றிவருகையிலங்கோர்மாடத்தின் சாளரத்தின்வழியாகத் தீயெரிவது போல எறிவதைகண்டு இவ்விடத்தில்நாகமானது தன்மாணிக்கத்தை கக்கிவைத்துவிட்டு இரைதின்னப்போயிருக்கின்றதோவென்றெண்ணி யுற்றுநோக்கி இது கூந்தலின்மயிரிலிருக்கின்றமுத்தென்று தெரிந்துகொண்டு பின்பு இங்குபகாவலிபடுத்துநித்திரைசெய்யு மாடமாமோவென்று பலபலவிகாரங்கொண்டுஇரவெல்லா மிதேஎண்ணமாயிருக்கையில் பொழுது விடிந்தது அப்போதவளசமன் ரூப்பரியினிடத்திற்குவந்து இன்னைமெத்தையில்யார்படுத்துநித்திரைசெய்கிறதென்றுவினவ அதற்கவள் றாகேஅப்சா அம்மெத்தையில் படுத்து நித்திரைசெய்கிறதென்று சொல்லினள் அதைக்கேட்டவுடனே பயிருமிற்குக் காமந்தலைக்கேறிட்டது அதனாலவன் அதைத்தேடுதற்குஇச்சயாயினன் அப்போது மற்றுநாளிரவானது தனவழக்கப்படியேரூகேஅப்சா தன்மாடத்தற்சென்று பஞ்சணைமெத்தையின்மேல்படுத்து நித்திரைசெய்துக்கொண்டிருந்தனள் அப்போது பயிருமகாமபாணத்தை யவள்மேல்பிரயோகிக்கவேணுமென்றெண்ணி பித்தங்கொண்டவனாய்ப்புறப்பட்டு அச்சோலையிலிருக்கும் மாடமாளிகையினுட்சென்றுபாரக்கையிலருகே அப்சாபஞ்சணை மெத்தையின்மேல் மல்லார்ந்து ஒய்யாரநித்திரைபோவதைக்கண்டு அப்போது மறியாதவனாதலால் தீபத்தில் அந்தப்பூச்சிவிழுந் துயிரைமடித்துக் கொள்வதுபோலஇதன்நிதானமென்றுதெரியாமல் தேனில்வண்டு விழுவதுபோலப் பொறுக்கமுடியாமல் தட்டியெழுப்பித்தழுவி மனங்கொள்ளாமலேநித்திரையிலிருக்கும் றாகேஅப்சாவின் முகத்தோடு முகத்தைவைத்துக் கன்னத்தில் முத்தமிட்டான்.

அப்போதவள் விழித்துகொண்டு பார்க்கையில பயிருவாகயிருக்கக்கண்டு அவனுசைஎன்னுஞ்சிலை யிவளின்மோகமென்னுமகும்பத்தை துண்டுதுண்டாயொடித்துவிட்டது அப்படிஇருந்து மிவள் வல்லவளானகயால் ஆசையையடக்கி மருமம்விடாமல் ஆசையற்றவளைப்போல தன்முகத்தைசுருக்கி கடுஞ்சினமாக அவன்பயப்படும்படியான கடுஞ்சொற்களைச்சொல்லி முகத்தைதிருப்பி உதயல்உதறினள் அதனாலவன் காப்பாபட்டுசன்னல்வழியாகக்கீழேவிழுந்து மழுதுக்கொண்டே தன்னகரமடைந்தான் பின்புறாகே அப்சா பொழுதுவி

தை சோதிக்கையி லநேகவஸ்துக்களிருந்தது அதிலோர்கண்ணாடி யி ருந்தது அதையெடுத்து அதின்பின்புறமாக இக்கவியை யெழுதினான்

தரு-இ-ம்-சுருட்டி.

முகங்காட்டுங்கண்ணாடி மேல்காட்டுங்கண்ணாடி
அகங்காட்டுங்கண்ணாடி ஆள்காட்டமாட்டாயா
ஆசைகண்ணாடியேநீ அழகின்கண்ணாடியேநீ
ஓசையாயிலங்காண உருக்காட்டாய்கண்ணாடி
முகம்பார்க்குநதேனைஎன் முத்துமணியாளேஉன்
அகம்பார்க்கஇன்றெனக்கு ஆள்காட்டாய்கண்ணாடி
மோகத்தைதந்தெனக்கு முழுதுமோசஞ்செய்துவந்த
தாகமதைநீக்கின்று தயவானகண்ணாடி

வசனம்.

இவ்விதமாக எழுதி அதைமுன்னிருந்தவிடத்தில் வைத்து வி ட்டானபின்பு தன்வழக்கப்படி பகாவலி ரூஹேஅப்சாவைச்சிங்காரி க்கத்தகுந்த சாமான்களை யெல்லா மெடுத்துக் கொண்டுபோய் அவ ளைச் சிங்காரிக்கச் சீப்பிட்டு அஞ்சனமிட்டுச் சகல வேலையுமுடிவா னவுடனே அந்தகண்ணாடியை ரூஹேஅப்சாகையிற் கொடுத்தனள் அதையவள்வாங்கும்போது அக்கண்ணாடியின் பின்புறமாக அவள் பார்வைவிழுந்தது அப்போததைக்கண்டு வாசித்துப்பார்க்கையில்த ன்னையிச்சித்தவனெழுதிய மறுமொழியென்கிறதாகத் தனக்குள்ளே தானே தெரிந்துக்கொண்டு இது அவனைத்தவிர வேறொருவருடைய வேலையல்ல இதைமனதிற் தெரிந்துக் கொள்ள வேணுமென்று அவ ள்புறமாகத்திரும்பி ஓ பெண்ணே ஒருவரிடமாக எப்போதும் நீங்கா மல் எவ்வஸ்திருக்கிறது இன்னமவ்வுருவிக்கினத்தின் கூட விருப்ப து எவ்வஸ்துச் சொல்லென்றுகேட்க அதைகேட்டவள் ஆலோசித் து ஒன்றும்பிரியாமல் கைகட்டியெழுந்து நின்று அடியாளிதற்குப்பி ரதிவாளையதினம் சொல்லுகிறேனென்று விடைபெற்றுக்கொண்டு த ன் வீடடைந்து அதிகவிசனத்தோடு கலக்கமுமுகவாட்டமாயிருப்ப தை பாயிருங்கண்டு அருகில்வந்து ஓயென்றமக்கையே இன்று அதிக விசனமாயிருக்கிறாயென்றுகேட்க அதற்கவளின்று என்னை நோக்கி ரூஹேஅப்சா ஒருவார்த்தைகேட்டனள் அதனால்இப்படியிருக்கிறேனெ ன்றுசொல்ல அதற்குபாயிரும் அதென்னவார்த்தை யென்றுகேட்க அதற்கவள் எப்போதும நீங்காமலெவ் வஸ்திருக்கிறது இன்னம்அவ் வொருவிசனத்தின் கூடவிருப்பது சொல்லென்றாளென்றுசொல்லய தையவர்கேட்டு சொல்லுகிறேனென்று ஆசைகொண்டவன்முகத்தில்

ஆசைப் பெறுபவனுடைய கையில் அடிபட்டிருக் கின்றது அவனுக்கெப்பேதும் செவ்வடிவாயிருக்கின்றது அதுஎப்பேதும்சந்தோஷமல்லாமல் பிரண்டுக்கொண்டிருக்கிறது இன்னம்யார்பேரில் இச்சைகொண்டிருக்கிறார்களோ அவர்களைத்தன்மனதிலுயிரென்றெண்ணுகிறது அதெப்படியெனில் மகனுவைப்பயார் பேரிலுண்மையா யிருந்ததென்று கேட்கஅதற்கவன்வயிலிக்கென்றுதாணிச்சித்தவன்பேரில் சொன்னானென்றுசொல்ல அதைப்பன்பாஷாகேட்டு சந்தல்நீங்கிப்பொங்குச்சூரியன் வந்துதித்தவுடனே ரூகே அப்சாவினிடத்தில் வந்து இச்சேதியைச் சொல்ல அதைரூகே அப்சாயாவற்றையுங் கேட்டுபயிரும் இங்குவந்திருப்பது நிச்சயமென்றறிந்துக்கொண்டள் பின்பு அவளைநோக்கி உனக்கிந்த விபரத்தைச்சொன்னதியா ரென்று கேட்க அதற்கவள் நான் இராத்திரிவந்திருக்கும் போது என்கியாபகத்தில் வந்ததென்று சொல்ல அதனையவள்மெய்க்கொள்ளாமல் ஏடித்து ஏடித்துக்கேட்க அதற்குப்பன்பாஷா அதிகவெட்கமுற்று ஓருநாளென்னிடத்திற்கு வசனரூப்பரிதன் கூடஒருபெண்ணையழைத்துக்கொண்டுவந்த என்னிடம்விட்டு இவள்என்னுடையஇஷ்டமுள்ளவரிவளுக்கு இவ்விடத்தின் வேடிக்கையைப்பார்க்கநாட்டமிருப்பல் இவளையழைத்துக்கொண்டுபோய் காண்பியென்று சொல்லிவிட்டுப்போயினன் அவளெனக்கு இதன்கருத்தைவெளிபடுத்தினாளென்று சொல்ல அதைறாகே அப்சாகேட்டுநீயேனிங்கு உன்கூட அழைத்துக்கொண்டு வருகிறதில்லை ஆனால் நாளையதினமவளை உன்கூட அழைத்துக்கொண்டுவாநானவளைப் பார்க்க வேணுமென்றனன் அப்படியே நல்லதென்று மறுநாள்சாயங்காலவேளைச் சிங்காரித்து ஆடையாபரணங்களணிந்து மணவாடைகள்பூசிக்கூட அழைத்துக்கொண்டுவரவும் அவளைறாகே அப்சாகண்டு இவள்ஹீரூவென்று மனதிலறிந்துகொண்டு அவள்புறம்திரும்பியவளைத் திருஷ்டித்துபாராமல் பராமுகமிருப்பதையவன்கண்டு இவள்நம்மை இன்னானென்றறியவில்லை இன்னம்கண்ணாடியின் பின்புரத்தையும்பார்க்கவில்லைஇன்னமவள் நம்முடன் சந்திக்கவில்லை ஆனால் நம்முடைய அதிஷ்டபாக்கியம் குறைவென்றுமெண்ணின அப்போது பன்பஷா அவர்களுக்குத் தலைவாரிமுடித்துச் சிங்காரித்து விட்றாகே அப்சாகண்ணாடியைக் கேட்டனள் அப்போது ஹீரூம்சீக்கிரமாகவெழுந்துக் கண்ணாடியைஎடுத்துமுதுகின்புறமாகத் திரும்பிக்கொடுக்க அதையவள் கண்டுகிலுகிலுவென்று உடல்குலுங்கநகைத்து ஓபன்பாஷாவே உன்தமக்கை சுத்தம்குடியாயிருக்கிறாள் இதுமுன்புறமென்றும் பின்புறமென்றுஇப்புறமாகச் சிங்காரப்பெண்களுக்குக் கொடுப்பதென்றும் தெரியவி

ல்லை ஆனாலுஞ்சறைவில்லை இன்றிரவில்இவளை இங்குவிட்டுப்போ நானிவளுடன்சிரிப்பு விளையாட்டின் பேச்சுகள் பேச வேண்டுமென்று சொல்லஅதனைக்கேட்டவள் மிகவுநன்றென்று அவளுக்குச் செய்யவேண்டிய பணிவிடை வேலைகளெல்லாஞ் செய்துமுடித்துவிட்டு அவளை அங்குவிட்டுவிட்டு அவள் மனைவந்துசேர்ந்தனள் பயிருமுப்போசமாளிகையினுள்ளிருந்தனள் பின்புறாகே அப்சா தன்குலத்தாருடைய சபையைவிட்டு நீங்கியவளும் வீட்டினுள்சென்றுபார்க்கும்போது தனியாகப் பயிருமிருக்கக்கண்டு சிநேகிதனைப் போலபேசத்தொடங்கி ஓ பெண்ணேஉன்பெயரென்ன வென்றுகேட்க அதற்கவளென் பெயரோமறந்துவிட்டது நினைவிலிருப்பதுஉன்பெயரொழிய மற்றொன்றுஞாபகமில்லையென்று சொல்லினள்.

பின்பவள்நீஇங்கு என்னகாரியமாக வந்தாயென்றுகேட்க அதற்கவன் அந்தப்பூச்சிவருகிறவிதமாவது விளக்கின்சுருக்காக ஆனாலதைக்கேட்கவேண்டியதென்று சொல்லஅப்போதுறாகே அப்சாபயிரும் சொல்லும் மதுரமான சொற்களைக்கேட்டு உங்களுக்குள்ளே சந்தோஷித்து வெளிப்புறத்தில் கடினகோபமுமாக முகத்தைச்சுருக்கி விழியா லமிரட்டி மோசஞ்செய்கிற இஷ்டமுள்ளானே உன்வார்த்தையினாலெனக்கு நன்றாகத்தெரியவருகின்றது நீபெண்ணல்ல ஆணாயிருக்கிறாய் நீஇவ்வேடமெடுத்துக்கொண்டுவந்தாய் என்பேரில்கீர்த்தியை முழுகவைத்தாய் இப்போமோசவேலைக்காக உனக்குஎப்படிப்பட்டதண்டனைகொடுப்பேனெனில் உன்வயதளவும் நினைவிருக்கவேணுமென்று உருட்டிமிரட்டியச்சமுறும்படிசொல்லியதைக்கேட்டுமுன்னால்நாமிவ்விடத்தி லடிப்பட்டிருக்கிறோமே இப்போது மப்படியே செய்வாளென்கிறதாக நினைவுவந்துகிடுகலங்கி மெய்மறந்து நானுயிரோடிருப்பதி லொருபலனுமில்லை உன்கையா லடிபட்டுப்போவதே பலனென்றேநினைத்துக்கொண்டே பூமியில் விழுந்துபயிரும் மூர்ச்சையாயினன்.

அகவல்-இ-ம்-தோடி.

வண்டுபோற்சுழன்று மந்திரிமைந்தன்
வண்டுபோற்றரைமேல் பயிராமன்விழவும்
கண்டுமேல்வாடிக் கலக்கமேவிட்டு
பெண்கள்நாயகி பிரியமேற்கொண்டு
சாமக்கொண்டோரைச் சசக்கிலாகா
பூமியில்வேறல்லாது புண்ணியமலவே
என்றுநினைத்து இளங்கொடிமங்கை
அன்றுபலவகையாய்ந்துவிழுந்தாள்.

வ-ம். அதைறூகே அப்சாகண்டு காமிவன்பேரில்பிரியம்வைத்திருப்பது தெரியாமல்நாமிரட்டினமொழியின் மேலச்சங்கொண்டவனாய்ப் பயந்துமூர்ச்சையாயினன் இதனாலிவனுக்குச்சேதம்வரில் நம்முடையபெயரை அனியாயக்காரர்களின் கணக்கி லெழுதப்படவேண்டுமென்றெண்ணி யெழுந்தோடிவந்து அவன் தலையை யெடுத்துத் தன்றுடைமேல் தூக்கிவைத்துக் கொண்டு அவன்மூர்ச்சைதெளியும்வரைக்கும்தன்கன்னத்தையவன் முகருப்படியாகவைத்து அவனைத் தெருவில்கொண்டுவர அப்போது பகீரும் மூர்ச்சை தெளிதலாய்க் கண்ணைத் திறந்துபார்க்கையில் தன் தலைகன்றுடைமேலிருக்கக்கண்டு அளவற்றமகிழ்வுள்ளவனாய் நமது கருத்துமுடிவாயினதென்று முன்பின் நடந்தசங்கதிகளெல்லாம் மறந்து எழுந்திருந்துகட்டியணைத்து முகத்தோடே முகத்தைவைத்துஉதட்டைக்கடித்துமுலையைப்பிசைந்து விழிகை முத்தமிட்டு மார்மேலுந்தோள்மேலும் உதட்டின்மேலும் நகக்குறிபற்குறி முதலியவைத்து அல்குலைவிரலாற்சுற்றிமதனலீலைபடித்தா மதுரத்தைக்குடித்து மதபாணமெய்து காமநீர்ப்பெய்துஉருண்டுபுரண்டு மணிகள்நெரியவும் துடைகள் விரியவும் மதங்கள்மனங்கொண்டளவு ஊடற்செய்து போகவாரியில் மூழ்கிச் சுகமடைந்தார்கள்.

பின்புஅன்றுமுதலாக றூகே அப்சாவிற்கு அவனைவிட்டு ஒருவினாடிவரைக்குங்கூடப் பிரிந்திருக்கக் கூடாதவளாய் அவனைப்பகைவர்களின் கடைசியிலவனை மகேந்திரசாலவித்தையினால் பஞ்சவர்ணக்கிளியாக்கிப் பகல்முழுதும்ஒருகூண்டிலடைத்துத் தன்னெதிரில் தொங்கிக் கொண்டிருக்கவும்செய்து இரவாகில் அக்கூண்டைவிட்டுக் கிளியைவெளியிலெடுத்து முன்வடிவாக்கி இரவுமுழுதுமிருவரும் போகித்துமன்மதச் சண்டைபுரிந்துக்கொண்டிருந்தார்கள் இப்படியிருவருக்கும் இம்மருமந்தெரியவொட்டாமல் சிலநாட்கழிந்தது இப்பேச்சு மறைவாக வேயிருந்தது அறையிலாடும்சூலம் பலத்தோடுமென்றதுபோல உள்ளடங்கியிராமல் வெளியானது இச்சேதியின்காற்றுமண்டு அக்கொடிய தீயின்விசனமானஉடனேஆருவரைக்கும்மெற்றினது அப்போதவளிதை சோதிக்கவேண்டுமென்று ஒருநாள் சூரியனுதிக்கு முன்னமாக அதிகாலையிலெழுந்து றூஹே அப்சாவிருக்கும் படுக்கைவீடுவந்து சேர்ந்து அவளைப் பார்க்கும்போது அவளின் தலைகூந்தல்விரித்திருக்கவும் உடல்தட்டில் பற்குறியும் நகிச்சைகைவிட்டு முலைகள் பிதுங்கியிருக்கவும் சேலைவிலகியிருக்கவும் இனனமிப்படி பற்பல அவகோலமாகப் படுத்திருக்கக்கண்டு இவளொவனுடைய மாயவலையினுள் சிக்கியிருக்கிறாள் அதனாலிவளிக் கோலங்

களா யிருக்கிறாளென்றெண்ணித் தனக்குள் தானே தெரிந்துக்கொண்
டு அதிககோபத்தோடு தூரமாயிருந்தோடிவந்து மாதிபிரண்டுமூன்ற
டி முதுகின்மேலடித்து அடியாதகிதோ தகிகூதுக்கள்ளிநீங்கள்பேரை
ப்போக்கடித்தால் கைசேதப்படுத்தினாய் என்ன கொடியவேலைசெய்
தாய்நீயெவன்மேலே யோசித்திருக்கிறாய் நீவேற்றுமனிதன் மேல்
மோகித்திருக்கிறாய் யின்னமுன் தந்தையினுஸ்தானத்திற்கு ஊனமு
ண்டாக்கினாய் நீ இருக்கிறகோலங்களினாலெனக்கு அதிகசந்தேகந்
தோன்றியிருக்கின்றது இதைநீஒளித்தாலொருபோதுந் தீராதுகை
யில் களவிருக்க நெய்யில்கைவிடவேண்டாம் நடந்த சங்கதியை ஒளி
க்காமலென்னுடன் சொல் இல்லாவிடி லுன்னை உயிரோடே வைக்
கேன் தலையையறுத்துவிடுவேன் இனிபிழைத்திருப்பா யென்றெண்
ணாதே யென்று மிரட்டுருக்கேட்பதை ரூகே அப்சாகேட்டு திடுக்கி
ட்டு உடம்பெல்லாம் கிடுகிடுவென நடுக்க முற்று ஓ என்றாயே உன்
தலையாணை என் தந்தையின்பாதத்தாணையாக நானிது வரைக்கும் ஒ
ரு ஆண்பிள்ளைகளைக்கண்டறியேன அவர்களைநேரிட்டுச்கண்ணாலும்
பார்த்தறியேன் ஒருஆடவர்முன்னும் நின்றறியேன் அப்படிப்பட்ட
வள்மேல் நீஇன்று நிணைகப்படுதூறு பேசுகிறாய்ஒரு குற்றமுமில்லா
தவர்களுக்கு நீயேகுற்றப்படுத்துகிறாய் இன்னம் நீ சொல்வார்பேச்
சைக்கேட்டு மெய்யென்றெண்ணி என்னைப் பங்கபடுத்தநினைத்தாயெ
ன்று விதவிதமாகிய இல்லாதும் பொய்யாணைகளையிட அதை யவள்
கொஞ்சமும் மெய்கொள்ளவில்லை பின்பவள் அக்கள்ளனைப் பிடிக்கு
ம்படி ஆயிரந் தூதர்களையேவி வானம்பூமி வரைக்கும் சகலவிடங்க
ளும் தேடும்படிக் கட்டளையிட்டனன் ஆனால்வெளிக்கள்ளனாகில் அ
கப்படுவான உட்கள்ளன அகப்படுவானா ஒருபோதும் அகப்பட மா
ட்டான ஆனால் அவர்செய்து வைத்திருந்தமர்மம் அவளுக்குத் தெ
ரியாது அதினால் ரூகே அப்சா வினருகிலிருந்து பணிவிடை வேலை
செய்யும் கன்னிகைளை யழைத்து முக்பாஷா வினுடைய தண்டனையி
ன அச்சப்படுபவர்களுக்குச் சொல்லி பயமுண்டாக்கி உங்களுக்கு
அச்சேதியாவது தெரியுமாவென்றுகேட்க அப்போதவ்விடத்திலிரு
ந்த யாவரும் எங்களுக்கு யாதொன்றும் தெரியா தென்று சொல்லி
னார்கள் அதிலொருத்தி ரூகே அப்சா வினுடைய அருகிற் சேர்ந்தவ
ள் நானவர்சொன்று மறியேன ஆனாலவளிடத்தில் ஒருப்பறவையாயி
ருக்கின்றது அதையொரு கூண்டிலடைத்து தன்னெதிரில் வைத்து
க்கொண்டு கண்ணிமைப் பொழுதும் எதிர்விட்டு நீங்காமலிரு
க்கும்படி வைத்துக் கொண்டிருக்கிறாள் அதிலொன்று தவிர மற்
றவைகள் தெரியா தென்று சொன்னாள் அதைக்கேட்டு உடனே
ரூகே அப்சா விருக்கும் படியான மாடத்தினுட் சென்று அவளெதி
ரில் கட்டி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்த பறவைக் கூட்-

டையழித்துக் கையிற்பிடித்துக்கொள்ள அப்போதருகேஅப்சா அதைக்கண்டுஇடியொலிகேட்ட மயில்போலமுகம்வாடிநிற்கையில்அவள்அதைக்கொண்டுபோக நாடித்திரும்பினாள் அப்போதருகேஅப்சாவிற்குஉயிரானது பதைபதைத்துடித்து இப்பாவிக்கூட்டைக் கொண்டுபோகிறாளே இனியவளை உயிரோடுவைப்பதில்லையென்று நம்பிக்கையற்றவளாய் பிசைந்துக்கொண்டு கலக்கமுகமாகி யாதொன்றும் பேசாமல் ஊமையைப்போலிருந்தது தனக்குள்தானேபுலம்பினாள்.

ருகே அப்சாபுலம்பல்-தரு-இ-ம்-பைரவி.

இன்றுகிளிதலைப்பிடித்து — ஐயே
என்றற்று பார்கொண்டுபோனாளே — ஐயோ
என்றுகாண்பேன்மன்னவனை — ஐயோ
என்னசெய்வேனேதுசெய்வேன் — ஐயோ
பாவியானேன்மன்னவனுக்கு — ஐயோ
பதறுதேயென்னங்கமெல்லாம் — ஐயோ
ஆவிதுடிதுடிக்குதின்று — ஐயோ
ஆதியேநீகார்க்கவேணும் — ஐயோ

வ-ம். இவ்விதமாக இக்குயிலவள் புலம்பிக்கொண்டிருக்கப் பின்பு அக்கூட்டை முக்பாஷாவினுடைய எதிரில்கொண்டுவந்து வைத்தனள் அதையரசன் கூட்டினிலிருக்கப் பறவையாயவெளிபாக்கியதனுடம்பெல்லாந் தடவிப்பார்த்துவருகையில் கடைசிதன்கழுத்தில் கட்டியிருந்த குளிசமொன்று ஒன்று அகப்பட்டது அதனையவிழ்த்தவுடனே அக்கிளிமாநிடவடிவாய் பயிறுமெதிர்நின்றதன்னைக்கண்டு அங்கிருந்த சபையார்களெல்லாம் ஆச்சரியமாய்விட்டார்கள் அரசனுமதிக கோபத்தை யுடையவனாய் ஓ கெடுதலையுள்ளவனே கொடியகுலத்தானே இவ்விடம்மாநிடர குலத்தாரொருவரும் வாராததல்லவென்றறி யாரோ இவ்விடத்திலுன்னைக் எடுத்து வந்துவிட்டவாயார் நீ எவ்விதமாய் வந்தாய் நான்கெட்டவர்களுக்கும் துஷ்டர்களுக்கும் அதிகதண்டனைகளைக்கொடுத்து சிரசாக்கினைசெய்பவரென்று கொஞ்சமும் யோசிக்காமலிவ்வளவு அலங்காரங்கொண்டாரென் றருட்டிமிரட்டிப்பலவாறுசச்சொல்ல அதைபயிறும்கேட்டு ஓராசனைதீபத்திரிவைக்கண்டு அந்தப்பூச்சொன்று நாமிதில்விழுந்தால் வெந்துபோவோமென்கிற அச்சமிருந்தால் அதில்விழுமா அப்படிபோல சாமியைக்கண்டு காமனஞ்சுவனா துணிந்தவனுக்குச்சமுத்திரம் முழங்காலளவென்பதுபோல் புத்திவான்பிதுக்கஞ் சுவானாவென்றதுணிந்தமனதோடு

செய்து அந்ததுருசுபாஷைக்கேட்டு அதிககடுஞ்சினமடைந்துதன்னரு
கி லிருப்பவர்களைநோக்கி யூருக்குவெளிப்புறத்தில்அக்கினியுண்டா
க்கிஅதிலிவனைவிட்டு எச்சரித்து சாம்பலாக்கி விடுங்களென்றுகட்ட
ளையிட்டான்,

அப்போதுபகாவலியும் தாசுல்முலுக்குமாக ஷிம்மெனுஞ்சோ
லைபோவதற்குவந்து ஓரிடத்தில் தங்கியிருக்கையில்அப்போபகவலி
யும் நாமிவ்விடத்திற்குவந்தோம் இப்படி பிறதவ்செனுஞ் சோலைக்கு
ட்சென்றுருகே அப்பூசரீவைப்பார்த்து போவோமென்றிருவரும்
பேசிக்கொண்டு அச்சோலையின்புறமாகத்திரும்பி நெருங்கிவருகையி
ல் அங்கோரிடத்தில் மலைபோல் உயரமாக விறகுகளைக்குவித்து அத
ற்கு நாலுபுறமு மக்கினியை மூட்டிவிட்டு அநேகஜனங்களாகக் கூடி
யிருப்பதை யிருவருங்கண்டுஇதென்ன புதுமையாகவிருக்கின்றதுஅ
ங்கேஇப்படிப்பட்டதிரளானஜனங்கள் கூடியிருக்கிறார்கள்தைநாமும்
போய் கண்டறிவோமென்று அங்குவந்துஅவ்விடமிருப்பவர்களை யி
தென்ன கூட்டமென்று ஆச்சரியமானகாரியமென்றுவினவ அதற்க
ங்கிருப்போர்கள் இன்றருகே அப்சாவின்மேலிச்சைகொண்டவனைய
ரசன்பிடித்து தீயிலிடும்படி கட்டளைசெய்தனன அதற்காக அவனை
க்கொண்டுவந்து தீயிலிட்டோமென்று சொல்வதைக்கேட்டவுடனே
தாசுல்முலுக்கு தானேறிவந்த வாகனத்தைவிட்டுக்கீழேயிறங்கி அ
க்குவந்துபார்க்கையில் பயிரும்உட்கார்ந்திருக்கக்கண்டு மனங்கலங்கி
ஓ கூட்டங்களே நீங்கள் சீக்கிரமாகஅத்தீயையவியுங்கள்அவனைவெ
ளியேயெடுங்கள் இல்லாவிடில் நீங்களும் நீங்கள் வாழூழர்களும் வி
ணாய்ச்சேதமடைவீர்களென்று ஒலிமேலொலியொக்கச்சகலருமதை
க்கேட்டு இதென்ன புதுமையென்றுகலக்கப்பட்டார்கள்பின்புஅந்தத்
தீயையவித்திருவனை வெளியிலெடுத்து அரசன்குமாரன் வசமாக
ச்சேர்த்துவிட்டு அச்சோலையினுட்சென்று தாசுல்முலுக்குபகீரூமி
ருவரையும் ஓரிடத்திலிருந்துவைத்துவிட்டுப்பகாவலி தனியாக மு
ச்பாஷாவுடனே ஆறுவதிவர்களிடஞ் சென்றவர்களுக்கு வந்தனஞ்
செய்திட அவர்கள்பகாவலி தன்வரவைக்கண்டுகண்குளிர்ந்தவர்களா
ய் மிகுந்தமகிழ்ச்சியோடு அவளைக்கட்டியணைத்து மார்போடுசேர்த்து
நீங்கள்சுகமாவென்றுகேட்க அதற்கு பகாவலி உங்கள்கிருபையினால்
நாங்கள்சேமம் மற்றோர்களும் சேமம் ஆனாலெனக்குத் தங்களைக்கா
ண அதிக இச்சையாயிருந்தது அதனாலிங்குவந்தேனேதவிர மற்ற
வையாய் வரவில்லையென்றுசிலபேச்சுகள் பேசிமுடிவானபின்பு பகா
வலிநான்வருகிறபாதையில் ஒருபுதுமைகண்டேனதுஎன்னவெனில்
என்மாமனுடைய மந்திரிகுமாரனைத்தீயிலிடநாடிக்கொண்டிருந்தார்க

ளத்தருணத்தில் நானங்குவந்தே நில்லாவிடில் இந்நேரம்வெந்துசாம்பலாய்ப்போவான் உலகின்வாழ்க்கையைவிட்டுப்பிரிந்து போவான் ஆனதாலாகுமானவேலையாய் முடிந்துவிட்டது அதற்குறித்து விசனப்படுவதில் யாதொருபலனுமில்லை ஆகையினால் நாங்களவன்பேரில்வைத்திருக்குங் கோபத்தைப்பொறுத்து கிருபைசெய்து அவனுயிரைமன்னித்து ரூகே அப்சாவையவனுக்கேமணமுடித்து விடவேண்டியது அதேதெனில் அவன் அறிவிலும்தெளிவிலும் நிறைந்தபுண்ணியன் அவனுக்கு ரூகே அப்சாவிவாகஞ்செய்து கொடுப்பதிலொன்றுநஷ்டம் நமக்கும் மாநிடகுலமதிகப்பெரிது அப்படிப்பவர்கள் சிறிய குலமுள்ளவராயிருந்தால் நீங்களென்னையேன் தாசனுக்குவிவாகஞ்செய்துகொடுத்தீர்களென்றுசொல்ல அதையரசன்கேட்டு தலைகவிழ்ந்தவனுய்ச்சம்மதிப்பட்டனன்.

பின்புபகாவலி ரூகேஅப்சாவிருக்கும் மாடத்திற்குவந்து பார்க்கையிலவள் அப்போது வேறுமுகம்பட்டுப் பலகோலமாக அழுதுக்கொண்டு படுத்திருப்பதைக்கண்டு புன்சிரிப்போடு அடிமயக்கக்காரி விநோதக்கள்ளி நீயேயிக்கோலமாய் படுத்திருக்கிறாய் எழுந்துசிங்காரித்துக்கொள் உன்னுடையகாமனைக்கொண்டுவந்திருக்கிறேனொன்றுக்குமஞ்சாதே உன்வீட்டைவிட்டுவெளியில்வா அதிகசந்தோஷத்துடனிருவென்று பலபலவிதமாகச்சொல்லக்கேட்டு ரூகேஅப்சா தன் துயரங்களெல்லாம் நீக்கி அதிகமகிழ்வோடெழுந்து உட்கார்ந்தாள் அப்போதுபகாவலிரூகே அப்சாவினுடையகழுத்தைக்கட்டியணைத்து இரண்டுபேருமாக இரவெல்லாம் பேசிக்கொண்டேயிருந்து அவ்விரவு பகாவலி அங்குபோக்கினள் பொழுதுவிடிந்தவுடனே ரூகே அப்சாவைத்தாய்தகப்பனுக்கு முசுபாஷாவுடனே ஆறுயிவர்களிடத்திற்குக் கொண்டுபோய் அவள்குற்றத்தைப் பொறுக்கவைத்தனள்.

பின்புதாசுல்முலுக்கு பயிறு முதலாகியபேர்களுடன் இறவெஞ்னும் சோலைவந்து சேர்ந்தார்கள் இன்னம் தாய்தகப்பனுடன் சகல சங்கதிகளுஞ்சொல்லிப் பின்புதாசுல்முலுக்கை மணம்புரிய எவ்விதமாகக் கொண்டுபோனீர்களோ அவ்விதமாகப்பகீறுவைசிங்காரித்து அலங்கிர்தத்தோடு மணக்கோலஞ்செய்துக்கொண்டுபோய் சேருமென்றபடியே அவ்வூரடங்கலும் சிங்காரித்து சகலபேருக்கும்நானுவிதமாகிய விருந்தளித்துப் பின்புபகீறுவிற்கு முத்துமணிகள்பதிந்த ஆடைகளணிந்துமுத்துமாலையிட்டு அந்த ஆடம்பரத்தோடு பிறதெள சென்னும் பட்டணங்கொண்டுபோய்ச் சேர்ந்தார்கள் இன்னமவ்விடத்தின்வேலைவினோதங்களை என்னென்றுசொல்வேன் இன்னம் ரூகே

அப்சாவைசிங்காரித்ததை என்னவென்றுசொல்வேன் காகிதத்திலும்கல்லினுலு மெழுதமுடியாது மாப்பிள்ளையும் மற்றபெயர்களையுமழைத்துவா முச்பாஷாவினுடைய வனுத்ததூதர்கள் முன்னணியாகவந்து யழைத்துக்கொண்டுபோய் அவருசிங்காரித்துவிரிப்புகள்விரித்துச் சகலகனங்களும் கூடியசபையில்கொண்டுபோய்விட்டார்கள் இத்தன்மையாகவே பெண்ணை பெண்கள்சென் றழைத்துக்கொண்டு வந்திருந்தினார்கள் பின்பு பாதியிரவரைக்கும் வேடிக்கைகள் ஆட்டம்பாட்டமும் பாணவேடிக்கைகள் மத்தாப்பு தீவட்டிகள் நானாவிதவேடிக்கையுடனேதங்கள் வீடுங்கப்படி சகலருங்கூடி ரூகேஅப்சாவிற்கும் மங்கிலியந்தரித்தாரின் பின்புசர்க்கரைவழங்கி மகிழ்வுற்றுப் பெண்ணும்பிள்ளையும் பேர்க வீட்டிற்குள்ளனுப்பினார்களப்போது பகாவலிபகிருமென்றூடவேயிருந்து இவ்வேலைகளையெல்லாம் முடித்துபானகங்குடிப்பாட்டிக் சந்தோஷப்படுத்தினான் பின்புமுச்பாஷவும் உடனேஆருவவெண்ணானமணிமுத்துகளும் மெத்தைகட்டில்களும் வேண்டுமானபணங்காசும் அடிமையடியாளுங்கொடுத்துச் சீதனத்தோடேன்பெண்ணையும் பிள்ளையையுமனுப்ப சகலபேருமாகக்கூடி பிறகு அரசனுஞ் சோலைவந்தார்கள் அங்குசிலநாள்வரைக்கு மிருந்து பின்புபகாவலி தாசுல்முலுக்கு பகிரும் ரூகேஅப்சா இவர்கள் கூடி காரெனும் பட்டணம் பட்டணம்வந்துசேர்ந்து பின்புபகிருமுடைய தாய்தகப்பனையழைத்து இந்தச்சங்கதிகளையெல்லாஞ் சொல்லிக்கடைசியில் சிங்காரிப்புடனே இருவரையுங்காட்ட அப்போதுமகனையும் மருமகளையும் பார்த்துமெத்தசந்தோஷமாகிப்பின்புதன் அரசனைக்கூட்டிவந்து மந்திரியானவர்கள் சகலபேரும் விருந்திடுவதற்காகப் பெரியோர்சிறியோர் உத்தியோகஸ்தர் முதலியபேர்களையழைத்துச் சிலநாள்வரை ஆட்டம்பாட்டமோடதிகவேடிக்கை செய்துவிருந்தளித்துஅதிகவெகுமதிகொடுத்து இஷ்டத்துடன்விருந்தாளிகளெல்லாம் அவாளவாளிடம் போய்சேர்ந்தார்கள் பின்புபகாவலி ஹம்மாலாவையழைத்தென்னுடைய மாடகூடமுதலிய சோலையை இவ்விடம்கொண்டுவந்து சேர்ந்து விட்டதுபின்பதை தன்வீட்டினருகாகவைத்திறப்பாடுசெய்து அதனைப்பகிருமிற்கும் ரூகேஅப்சாவிற்குக் குடியிருக்கக் கொடுத்துவிட்டுப்பின்புசகலபேருமாகசுகத்தோடு வாழ்ந்திருந்தார்கள்.

ஸ்ரீ குலோபகாவலி கிஸாயென்னும்.

புஷ்பலீலாவதிகதை முற்றிற்றுப்பெற்றது.